இறைத் தந்தையைப்போல் இரக்கம் உள்ளவர்களாய் ...



தேடல் வெளியீடுகள்
புனித பவுல் குருத்துவக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 001




# இறைத் தந்தையைப்போல் இரக்கம் உள்ளவர்களாய் ...

இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி வெளியீடு

# இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான மன்றாட்டு

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே,

விண்ணகத் தந்தையைப்போல் நாங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருக்க/ நீர் எங்களுக்குக் கற்றுக்கொடுத்துள்ளீர்;/ மேலும், உம்மைக் காணும் ஒவ்வொருவரும் தந்தையையே காண்கின்றனர்/ என எங்களுக்குக் கூறியுள்ளீர்./ உம் முகத்தை எங்களுக்குக் காட்டும்; நாங்கள் மீட்படைவோம்.

பணத்தால் அடிமைப்படுத்தப்பட்ட சக்கேயு, மத்தேயு முதலானோரையும்/ படைக்கப்பட்ட பொருள்களில் மட்டுமே இன்பத்தைத் தேடிய பாவிப் பெண், மகதலா மரியா முதலானோரையும்/ உமது அன்புப் பார்வை விடுவித்தது./ பேதுருவின் மறுதலிப்புக்குப் பின்பு அவரை அழ வைத்ததும்/ மனந்திருந்திய கள்வனுக்குப் பேரின்ப வீட்டை உறுதிப்படுத்தியதும்/ உமது அன்புப் பார்வையே.

“கடவுளுடைய கொடையை நீர் அறிந்திருந்தால்”/ என்று சமாரியப் பெண்ணிடம் நீர் கூறினீர்;/ அவ் வார்த்தைகள் எங்கள் ஒவ்வொருவருக்குமே கூறப்பட்டவனாய் நாங்கள் கேட்போமாக!

கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாக மன்னிப்பிலும் இரக்கத்திலும் தமது ஆற்றலை வெளிப்படுத்துகின்றார்;/ காணமுடியாத அந்தத் தந்தையின் காணக்கூடிய முகமாக நீர் இருக்கின்றீர்./ உயிர்த்த ஆண்டவரும், மாட்சிப்படுத்தப்பட்டவருமான உமது காணக்கூடிய முகமாக,/ திருஅவை இவ்வுலகில் இருப்பதாக!

அறியாமையிலும் தவற்றிலும் இருப்போர் மட்டில் பரிவுகொள்வதற்கு ஏதுவாக /உம் பணியாளர்கள் வலுக்குறைவினால் போர்த்தப்பட வேண்டும் என நீர் விரும்பினீர்;/அவர்களை நெருங்கிவரும் ஒவ்வொருவரும்/ நாம் விரும்பித் தேடப்படுகிறோம், அன்பு செய்யப்படுகிறோம், கடவுளால் மன்னிக்கப்படுகிறோம்’/ என உணர்வார்களாக!

உம் தூய ஆவியை அனுப்பும்;/ அதன் அருட்பொழிவால் நாங்கள் ஒவ்வொருவரும் புனிதப்படுத்தப்படுவோம்./ அப்பொழுதுதான் இரக்கத்தின் யூபிலி/ ஆண்டவரிடமிருந்து இரக்கத்தைப் பெற்றுத்தரும் ஆண்டாக இருக்கும்;/ புத்துயிரளிக்கும் ஆர்வத்துடன் உமது திருஅவை/ ஏழைகளுக்கு நற்செய்தியைக் கொணரும்;/ சிறைப்பட்டோருக்கும் ஒடுக்கப்பட்டோர்க்கும் விடுதலையை அறிவிக்கும்; பார்வையற்றோர்க்குப் பார்வையை வழங்கும்./

இரக்கத்தின் தாயாகிய மரியாவின் பரிந்துரை மூலம்/ தந்தையோடும் தூய ஆவியோடும் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும்/ உம் வழியாக மன்றாடுகிறோம். ஆமென்!

# இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான இலட்சினை விளக்கம்

இயேசு சபை அருள் பணியாளர் மார்கோ ஐவன் ரூப்னிக் உருவாக்கிய இந்த இலட்சினை இரக்கத்தின் பொருளைச் சிறிய **இறையியல் தொகுப்பாக** வழங்குகிறது. உண்மையைக் கூறின், இது தொடக்கத் திருஅவைக்கு முற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் உருவத்தைக் குறித்துக் காட்டுகிறது: அதாவது, இறைமகன் தம் தோள்மேல் தொலைந்துபோன ஆன்மாவைச் சுமந்து இருப்பது, கிறிஸ்துவின் அன்பு, அவர் மனிதரானதன் மறைபொருளை நிறைவுக்குக் கொணர்வதாய் உள்ளது; அது மீட்பில் உச்சத்தை அடைகிறது. நல்ல ஆயர் மானுடத்தின் உடலைத் தொடுவதாய், அதுவும் அன்புடன் ஒருவரின் வாழ்வை மாற்றும் ஆற்றலுடன் தொடுவதாய் இந்த இலட்சினை மிகச் சிறப்பான வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் கவனிக்கத்தக்க ஒரு குறிப்பிட்ட கூறு என்னவெனில், நல்ல ஆயர் தமது பரந்தகன்ற அன்பால் மானுடத்தைத் தம்மேல் சுமக்கும்போது அவரின் கண்கள் மானுடத்துடன் இரண்டறக் கலந்துள்ளன. ஆதாமுடைய கண்களால் கிறிஸ்து காண்கிறார்; கிறிஸ்துவுடைய கண்களால் ஆதாம் காண்கிறார். ஒவ்வொருவரும் கிறிஸ்துவாகிய புதிய ஆதாமில், அவரது பார்வையில் தந்தையின் அன்பைத் தியானித்து, தம் மானுடத்தன்மையையும் வரவிருக்கும் எதிர்காலத்தையும் கண்டுபிடிக்கின்றார்.

தொடக்க, மத்திய காலங்களில் உருவங்களினால் பொருளை விளக்க முற்றிலும் முக்கியமான முறையில் பயன்படுத்தப்பட்ட உருவமாகிய வாதுமைக் கொட்டை வடிவப் பொருளில் இக்காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. இது கிறிஸ்துவின் இரண்டு இயல்புகளை – இறைத்தன்மையையும் மனிதத்தன்மையையும் – மனித மனத்தில் இருத்த நம்மைத் தூண்டுகிது. பொது மையம் கொண்ட மூன்று நீள்உருண்டைகளின் வெளிப்புறத்தை நோக்கி நாம் செல்லும்போது அதன் வண்ணங்கள் படிப்படியாக மங்கலாக உள்ளன; இது பாவம், இறப்பு ஆகிய இரவின் பிடியிலிருந்து மானுடத்தைச் சுமந்து செல்லும் கிறிஸ்துவின் செயல்பாட்டைக் குறித்துக்காட்டுகிறது. அதற்கு நேர்மாறாக, அடர்த்தியான வண்ணத்தின் ஆழம் எல்லாரையும் மன்னிக்கும் தந்தையின் ஆழங்காண முடியாத அன்பைக் குறித்துக்காட்டுகிறது.

**நூல்:**

**இறைத் தந்தையைப்போல் இரக்கம் உள்ளவர்களாய் ...**

**பகுதி I** : **இரக்கத்தின் முகம்**
திருத்தந்தை பிரான்சிஸ்
[*Misericordiae Vultus*
- Pope Francis, 2015]

**தமிழாக்கம்** : அருள்பணி. சூ. சந்தியாகு ராசா
**முதல் பதிப்பு** : நவம்பர் 2015

**பகுதி II** : **இரக்கம் மிகுந்த கடவுள்**
திருத்தந்தை 2-ஆம் ஜான் பால்
[*Dives in Misericordia*
- Pope John Paul II, 1980]

**தமிழாக்கம்** : ஆயர் செ. சூசைமாணிக்கம்
**முதல் பதிப்பு** : சூலை 1981
**திருத்திய இரண்டாம் பதிப்பு:** நவம்பர் 2015

**பக்கங்கள்** : 144
**பிரதிகள்** : 8000
**விலை** : ரூ. 50/-
**தாள்** : 70 GSM ஃபப்
**அச்சு** : ஆண்டோ பதிப்பகம், சிவகாசி

# உள்ளடக்கம்

**அணிந்துரை** 5

**பகுதி I**

**இரக்கத்தின் முகம்**

முன்னுரை 11
இரக்கத்தின் முகம்: 15
இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான ஆணை மடல்

**பகுதி II**

**இரக்கம் மிகுந்த கடவுள்**

உள்ளடக்கம் 53
விளக்க முன்னுரை 55
இரக்கம் மிகுந்த கடவுள்: சுற்றுமடல் 67

**இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான மன்றாட்டு**

**இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான இலட்சினை விளக்கம்**

# அணிந்துரை

**இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டு!** ‘‘இரக்கத்தின் திருத்தந்தை’’யாக விளங்குவதோடு, ‘‘இரக்கத்தின் திருஅவை’’யை முன்னெடுத்துச் செல்லும் நம் *திருத்தந்தை பிரான்சிஸ்* இரக்கத்தின் ஆண்டை அறிவித்திருப்பது எத்துணைப் பொருத்தம்! அதில் எத்துணைப் பொருள் அழுத்தம்!

இரக்கம் என்றால் பிற உயிர்களின் – மனிதர்கள் மட்டும் அல்ல – துன்பம் கண்டு மனம் இளகுதல்/இரங்குதல்/வருந்துதல், பரிவு கொள்ளல் எனப் பொருள்படும். ‘‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’’ என்பார் *வள்ளலார்.*

இரக்கம் என்பது வெறும் உணர்வு அன்று; அன்பு செய்யும் ‘‘இறைவனின் முகம்’’ என்னும் உண்மையை விவிலியம் சிறப்பாய் எடுத்துரைக்கிறது.

எகிப்து நாட்டில் இஸ்ரயேல் மக்கள் பட்ட கொடிய துன்பம் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்த கடவுள், பிடிவாதம் கொண்ட அவர்களைக் கைவிட்டுவிடாமல், இரக்கம் நிறைந்த தந்தையாகவும், பரிவு காட்டும் தாயாகவும் தம்மை வெளிப்படுத்தினார்: ‘‘ஆண்டவர்! ஆண்டவர்! இரக்கமும் பரிவும் உள்ள இறைவன்; சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்கு உரியவர்; ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்; கொடுமையையும் குற்றத்தையும் மன்னிப்பவர்...’’ (விப 34:6-7). இக் கருத்து விவிலியம் முழுவதும் இழையோடக் காணலாம் (திபா 86:15; 136; மீக் 7:18-20; நெகே 9:17-19; லூக் 6:36; எபே 2:4). இவ்வாறு கடவுள் தமது ஆற்றலை எல்லாவற்றிற்கும் மேலாகத் தமது இரக்கத்திலும் மன்னிப்பிலும் வெளிப்படுத்தினார். ‘‘கருணை உன் வடிவல்லவா? கடவுள் உன் பெயரல்லவா?’’ என்னும் வரிகளில் எத்துணைக் கருத்தாழம் உள்ளது!

உருவம் அற்ற இறைவனின் இரக்கத்திற்கு உருக்கொடுத்தவர் – உயிரும் கொடுத்தவர் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. அவர் தம் செயலிலும் சொல்லிலும், வாழ்விலும் பணியிலும், முழு ஆளுமையிலும் இறைத் தந்தையின் பேரிரக்கத்தை வெளிப்படுத்தினார். ''உங்கள் தந்தை இரக்கம் உள்ளவராய் இருப்பதுபோல் நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்'' (லூக் 6:36) என்று அறிவுறுத்தினார். மன்னிக்க மறுத்த பணியாளர் உவமை வழியாக, ''நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும்'' என்று பாடம் புகட்டினார் (மத் 18:21-35). ''இரக்கம் உடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்'' (மத் 5:7) என்று மொழிந்தார். இயேசு அறிவித்த நற்செய்தி ''இரக்கத்தின் நற்செய்தி'' (எ.கா., *லூக்கா நற்செய்தி*, சிறப்பாக அதி 15).

இறைவனின் முகம் இரக்கத்தின் முகம் என்றால், இயேசுவின் முகமும் அதே இரக்கத்தின் முகம் என்றால், திருஅவையின் முகமும் அதுவாகத்தான் இருக்க முடியும். எனவே திருஅவை எந்த அளவுக்கு இரக்கத்தை வெளிப்படுத்தி வாழ்ந்துகாட்டுகிறதோ அந்த அளவுக்குத்தான் அதன் நம்பகத்தன்மை வெளிப்படும் என்பதைத் திருத்தந்தை பிரான்சிஸ் தம் மூச்சிலும் பேச்சிலும் எழுத்துவீச்சிலும் தெளிவுபடுத்தி வருகிறார். ''திருஅவை என்பது இரக்கத்தைக் கொடையாகப் பெற்றுக்கொள்ளும் இடமாக விளங்க வேண்டும்; எல்லாரும் ஏற்றுக்கொள்ளப்பெற்று, அன்பு செய்யப்பெற்று, மன்னிக்கப்பெற்று, நற்செய்திக்கு ஏற்ற நல்வாழ்வு வாழ ஊக்கப்படுத்தப்பெறும் இடமாகத் திகழ வேண்டும்'' (*நற்செய்தியின் மகிழ்ச்சி*, 114). இவ்வாறு இரக்கம் திருஅவையின் அடிப்படையாக, நிபந்தனையாக, இலக்காக அமைகிறது என்பதைத் திருத்தந்தை வலியுறுத்துகிறார்.

இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டை அறிவிக்கும் பொருட்டு **இரக்கத்தின் முகம்** என்ற ஆணைமடலைத் *திருத்தந்தை பிரான்சிஸ்* வெளியிட்டார். இம் மடலில் அடங்கிய இரக்கத்தின் நற்செய்தி நம் தமிழ் மக்களை, சிறப்பாக விளிம்புநிலை மாந்தரை எளிதாகச் சென்றடைய வேண்டும்; எல்லாரும் இரக்கத்தின் ஆண்டைப் பொருள் உள்ள முறையில் கொண்டாட வேண்டும் என்ற நோக்குடன் இது தமிழாக்கம் பெற்றிருக்கிறது.



தமிழாக்கத்தைச் செம்மையாகச் செய்திருக்கும் **அருள்பணி. முனைவர் சூ. சந்தியாகு ராசா** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

''இறை இரக்கத்தின் திருத்தூதர்'' என இன்று உலகம் எங்கும் அறியப்படும் *புனித இரண்டாம் ஜான் பால்* 1980-இல் **இரக்கம் நிறைந்த இறைவன்** என்ற சுற்றுமடலை வெளியிட்டார். நான் அதைத் தமிழாக்கியதோடு, மக்கள் அதை எளிதில் புரிந்துகொள்ள உதவியாக விளக்க முன்னுரையும் வரைய, திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரி அதை வெளியிட்டது.

இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டை மேலும் பொருள்படக் கொண்டாட அதை மீண்டும் வெளியிடுவது பொருத்தமாய் இருக்கும் என்ற எண்ணத்தில் நான் அதன் மொழிபெயர்ப்பைத் திருத்திச் செழுமைப்படுத்தி இருக்கிறேன்.

இறை இரக்க ஆண்டின் விருதுவாக்கான **இறைத் தந்தையைப்போல் இரக்கம் உள்ளவர்களாய்...** என்னும் தலைப்பில் மேலே கூறிய இரண்டு மடல்களும் ஒரே நூலாக உங்கள் கைகளில் தவழ்கின்றன. இதற்குக் காரணியான ''தேடல் வெளியீடுகள்'' செயலர் அருள்பணி. சூ. சந்தியாகு ராசா அவர்களுக்கும் புனித பவுல் குருத்துவக் கல்லூரிக்கும் என் வாஞ்சை கலந்த நன்றிகள்.

**இறை இரக்கத்தைப் பெறுவோம்**!
**இரக்கம் உள்ளவர்களாய் வாழ்வோம்**!!

சிவகங்கை
1 நவம்பர் 2015

செ. சூசைமாணிக்கம்
சிவகங்கை ஆயர் &
தமிழக ஆயர் பேரவைச் செயலர்

# இரக்கத்தின் முகம்

**திருத்தந்தை**

**பிரான்சிஸ்**

***வழங்கிய***

**இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான**

**ஆணை மடல்**


**தமிழாக்கமும் முன்னுரையும்**

**அருள்பணி. சூ. சந்தியாகு ராசா**

# முன்னுரை

இயேசுவின் மறுபெயர் இரக்கம் எனக் கூறலாம். அந்தளவுக்கு அவர் இரக்கத்தைத் தம்முடைய போதனையிலும் வாழ்விலும் வெளிப்படுத்தியுள்ளார். அவர்தாம் தந்தை யாரென நமக்குக் காட்டியுள்ளார் என்னும் மையச் செய்தியுடன் இவ்வாணை மடல் தொடங்குகிறது.

''தந்தையைப்போல் இரக்கமுள்ளவர்களாய்'' (லூக் 6:36) என்பதுதான் இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டிற்கான பொன்மொழியாக உள்ளது. கடவுளின் இரக்கத்தைப் பற்றிக் கூறும்பொழுது, ''கடவுளின் இரக்கம் அவரது வலுவின்மையின் அடையாளமாய் இருப்பதைவிட அவரது பேராற்றலைக் குறிப்பதாய் உள்ளது'' என்கிறது இம் மடல். இதைத்தான் திருப்பாடல் ஆசிரியர் ''என்றும் உள்ளது அவரது பேரன்பு'' (திபா 136) என்கிறார். இவ்வாறு, இரக்கமும் பேரன்புமே அவருடைய அடையாளங்களாக உள்ளன.

இருப்பினும், இரக்கம் என்பது தந்தையின் செயல்பாடு மட்டுமன்று; அவருடைய உண்மைப் பிள்ளைகள் யார் என்பதை உறுதிப்படுத்தும் அளவுகோலாகவும் அது உள்ளது. இன்று இரக்கத்தின் பாதையைக் காட்டுவதையும் வாழ்வதையும் நாம் தவறவிட்டுவிட்டோம்; நீதியின்மேல் மட்டும் கவனம் செலுத்தும் சோதனை நம்மில் இன்று மேலோங்கியுள்ளது. இத்தகைய சூழலில் இயேசுவின் வார்த்தைகளாகிய 'தீர்ப்பளிக்க வேண்டாம்; கண்டிக்க வேண்டாம்' என்பதை நமது வாழ்வில் கடைபிடிக்க இவ்வாணை மடல் மூலமாக நாம் அறிவுறுத்தப்படுகிறோம். எனவே, இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் உடல், ஆன்மிகம் சார்ந்த இரக்கச் செயல்கள் பற்றி நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். இவ்வாறு நாம் செய்யும் இரக்கச் செயல்கள் ''சிறியனவாய்'' இருப்பினும் அவற்றை முகமலர்ச்சியோடு செய்யவேண்டும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். அதே வேளையில் இரக்கச் செயல்களுக்கு எதிராக மானுட இதயத்தைக் கடினப்படுத்தும் சாவான பாவமாக இலஞ்ச ஊழல் உள்ளது. இது, கடவுளுக்குப் பதிலாக பணம்தான்

சக்தியின் வடிவம் என்னும் பொய்த்தோற்றத்தை உருவாக்குகிறது. இது, ஏழைகளுக்கெல்லாம் ஏழையாக இருப்போரை நசுக்குகிறது. எனவே, இதை எதிர்த்து நாம் போராட வேண்டும் என்கிறார் திருத்தந்தை.

நீதியும் இரக்கமும் முரண்பட்டவை அல்ல; அவை ஓர் உண்மையின் இரண்டு பரிமாணங்களே. நீதித் தீர்ப்பு என்பது மனமாற்றத்தின் தொடக்கமே; இங்குக் கடவுளின் இரக்கத்தை ஒருவர் உணர ஆரம்பிக்கின்றார். ஆனால், கடவுள் நீதியுடன் மட்டும் தம்மை நிறுத்திக்கொள்வதில்லை; அவர் தம் இரக்கத்தாலும் மன்னிப்பாலும் நீதியைக் கடந்து செல்கிறார். இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்கள்மேல் காட்டப்பட்ட இரக்கத்தின் உயர்வான வெளிப்பாடு கடவுளின் இரக்கம் எந்தளவுக்குச் செல்லும் என்பதைக் காட்டுவதாய் உள்ளது என்கிறது இம் மடல். இவ்வாறு, கடவுளின் பேராற்றலுள்ள இரக்கத்தைத் தொட்டு உணர்வதற்கு வழிவகை செய்வதாய் ஒப்புரவு அருளடையாளம் உள்ளது. எனவே ஒப்புரவு அருளடையாளத்தின் முக்கியத்துவம் இம் மடலில் வலியுறுத்தப்படுகிறது. மேலும், மன்னிப்பைத் தேடுவோரை வரவேற்கத் தயாராக உள்ள தந்தையின் வாழும் அடையாளங்களாக இரக்கத்தின் மறைத்தூதுப் பணியாளர்கள் செயல்படுவார்கள் எனவும் திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, கடவுள் வழங்கும் இரக்கத்தை நாம் அன்றாடம் வாழ்வதன் மூலம் கடவுள் நமக்கு வியப்பூட்ட நம்மையே நாம் அனுமதிப்போம் என்னும் சிந்தனையுடன் இம் மடல் நிறைவுறுகிறது.

இவ் வேளையில் திருத்தந்தையின் இம் மடலைத் தமிழில் மொழியாக்கம் செய்யத் தூண்டுதலாய் இருந்து, அதற்கு அணிந்துரையும் வழங்கியுள்ள சிவகங்கை மறைமாவட்ட **ஆயர் செ.சூசைமாணிக்கம்** அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன். இம்மடல் தமிழில் வெளிவர உற்சாகப்படுத்திய எமது **பவுல் இல்லக் குடும்ப உறுப்பினர்கள்** அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன். இந்த மொழியாக்கத்தை வாசித்து மொழித் திருத்தம் செய்த அருள்பணியாளர்கள் **தா. சேவியர் டெரன்ஸ், ச. ஆரோக்கியராஜ், வ. இரபேல், ஜோ. விக்டர் இம்மானுவேல்** ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். கைபெழுத்துப் பிரதிகளைக் கணினிப்படுத்தித் தந்த எம்



அலுவலகப் பணியாளர் **அ. ஜான்ஸி** அவருக்கு என் நன்றி. நூலை அழகுற அச்சிட்டுத் தந்தவர்கள் **சிவகாசி ஆண்டோ** அச்சகத்தார். அவர்களுக்கும் என் நன்றி.

**இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில்**
**இரக்கச் செயல்கள் எங்கும் வழிந்தோடட்டும்!**

புனித பவுல் குருத்துவக் கல்லூரி — அன்புடன்

திருச்சிராப்பள்ளி — அருள்பணி. சூ. சந்தியாகு ராசா

1 நவம்பர் 2015

# இரக்கத்தின் முகம்

## இறை இரக்கத்தின் சிறப்பு யூபிலிக்கான ஆணை மடல்

### உரோமை ஆயர்
### திருத்தந்தை பிரான்சிஸ்

**இறைப்பணியாளர்களுக்கெல்லாம் பணியாளர்**

***இக் கடிதத்தை வாசிக்கும் அனைவருக்கும்***

***அருளும் இரக்கமும் அமைதியும் கிடைப்பனவாக!***

1. தந்தையின் இரக்கத்தை வெளிப்படுத்தும் முகம் இயேசு கிறிஸ்து. இக் கூற்று கிறித்தவ நம்பிக்கையின் மறைபொருளைத் தொகுத்து வழங்குகின்றது. நாசரேத்தூர் இயேசுவில்தான் இரக்கம் உயிரோட்டமுள்ள வகையிலும், காணக்கூடிய முறையிலும் வெளிப்பட்டது; அவரில்தான் அது நிறைவடைந்தது. ''மிகுந்த இரக்கம் உடைய'' (எபே 2:4) தந்தை, ''இரக்கமும் பரிவும் உள்ள இறைவன்; சினம் கொள்ளத் தயங்குபவர்; பேரன்பு மிக்கவர்; நம்பிக்கைக்குரியவர்'' (விப 34:6) தமது பெயரை மோசேக்கு வெளிப்படுத்தியதோடு தமது வெளிப்படுத்துதலை நிறுத்திவிடவில்லை; மாறாக, தம் இறையியல்பைப் பல வழிகளில் வரலாற்றில் வெளிப்படுத்தியுள்ளார்.

‘‘காலம் நிறைவேறியபோது’’ (கலா 4:4) தமது மீட்புத் திட்டத்தின்படி எல்லாம் ஒழுங்கமைக்கப்பட்ட பின்பு, தந்தை தம் ஒரே மகனைக் கன்னி மரியாவுக்குப் பிறந்தவராய் இவ்வுலகிற்கு அனுப்பித் தம் அன்பை நமக்காக அளவு கடந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளார். யாரெல்லாம் இயேசுவைக் காண்கின்றார்களோ அவர்களெல்லாம் தந்தையையே காண்கின்றார்கள் (காண் யோவா 14:9). நாசரேத்தூர் இயேசு தம் வார்த்தையாலும் செயல்களாலும் முழு மனிதத்தாலும்[1] கடவுளின் இரக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

2. இரக்கத்தின் மறைபொருளைப் பற்றி நாம் தொடர்ந்து தியானிக்க வேண்டும். இதுவே மகிழ்ச்சியின், சாந்தத்தின், சமாதானத்தின் ஊற்றாக உள்ளது. நமது மீட்பு இதைப் பொறுத்துத்தான் உள்ளது. இரக்கம்: இவ் வார்த்தை போற்றுதலுக்குரிய தூய மூவொரு கடவுளின் மறைபொருளை வெளிப்படுத்துகின்றது. இரக்கம்: இது கடவுள் நம்மைச் சந்திக்க வரும் ஒரு நிறைவான ஒப்பற்ற நிகழ்வு. இரக்கம்: இது தங்களின் வாழ்க்கைப் பாதையில் யாரெல்லாம் நேர்மையோடு தங்கள் சகோதரர், சகோதரிகளின் கண்களை உற்று நோக்குகின்றார்களோ அவர்கள் ஒவ்வொருவரின் மானுட இதயத்திலும் உறைந்து வாழும் அடிப்படைச் சட்டம். இரக்கம்: இது நாம் பாவமுடைமையில் இருந்தாலும் எக்காலமும் நாம் அன்பு செய்யப்படுகிறோம் என்ற நம்பிக்கையை நம் உள்ளங்களுக்கு வழங்கி, கடவுளையும் மனிதனையும் இணைக்கும் பாலமாக உள்ளது.

3. சில வேளைகளில் நாம் இரக்கத்தின்மேல் கூடுதலாகக் கவனம் செலுத்தி உற்றுநோக்க அழைக்கப்படுகின்றோம். அப்பொழுதுதான் நமது வாழ்வில் நாம் தந்தையின் செயலுக்குச் சிறப்பான பயனுள்ள அடையாளமாகத் திகழ முடியும். இக் காரணத்திற்காகவே திருஅவையின் இச் சிறப்பான காலத்தில் நான் *இரக்கத்தின் சிறப்பு யூபிலியை* அறிவித்துள்ளேன்; இக் காலத்தில் விசுவாசிகளின் சான்று உறுதியாகவும் அதிகப் பயன் விளைவிப்பதாகவும் வளர வேண்டும்.

இப் புனித ஆண்டு அமல உற்பவப் பெருநாளாகிய டிசம்பர் 8, 2015 அன்று தொடங்கும். இத் திருவழிபாட்டு விழா தொடக்க காலத்தில் இருந்தே மானிட வரலாற்றில் கடவுளின் செயல்பாட்டை நினைவூட்டுவதாக உள்ளது.

1. காண் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்க ஏடுகள், *இறைவெளிப்பாடு பற்றிய கோட்பாட்டு விளக்கம்*, எண். 4.



ஆதாம், ஏவாள் பாவத்திற்குப் பின்பு மானுடத்தைத் தீமையின் துன்பத்தில் அப்படியே தனித்து விட்டுவிட கடவுள் விரும்பவில்லை. எனவே அவர், அன்பில் தூய, மாசற்ற மரியாவை உற்றுநோக்கி (காண் எபே 1:4), மானுட மீட்பரின் தாயாக அவரைத் தெரிவு செய்தார். பாவத்தின் அழுத்தத்தை எப்பொழுதெல்லாம் சந்திக்க நேர்ந்ததோ, அப்பொழுதெல்லாம் இரக்கத்தின் நிறைவால் கடவுள் பதில் அளிக்கின்றார். எந்தப் பாவத்தைவிடவும் இரக்கம் எப்பொழுதும் பெரியதாக உள்ளது; எப்பொழுதும் மன்னிக்கத் தயாராக உள்ள கடவுளின் அன்புக்கு எவரும் தடைபோட இயலாது. அமல உற்பவப் பெருநாள் அன்று தூய கதவைத் திறக்கும் மகிழ்ச்சி எனக்குக் கிடைக்கும். அன்றைய நாள் தூய கதவு *இரக்கத்தின் கதவாக* மாறும். இக் கதவின் வழியாக நுழையும் எவரும் ஆறுதல் வழங்கும், மன்னிக்கும், நம்பிக்கை வழங்கும் கடவுளின் அன்பை அனுபவிப்பார்கள்.

தொடர்ந்து வரும் ஞாயிறாகிய, அதாவது திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையன்று உரோமைத் தலைமைக் கோவிலின் தூய கதவு, அதாவது தூய ஜான் லாத்தரன் பெருங்கோவில் திறக்கப்படும். அதைத் தொடர்ந்து வரும் வாரங்களில் திருத்தந்தையின் ஏனைய பெருங்கோவில்களின் கதவுகள் திறக்கப்படும். அதே ஞாயிற்றுக்கிழமையன்று ஒவ்வொரு தலத் திருஅவையிலும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள விசுவாசிகளின் தாய்க் கோவிலாக உள்ள தலைமைக் கோவிலிலோ அல்லது சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த வேறு ஒரு கோவிலிலோ புனித ஆண்டுக் காலத்திற்கான *இரக்கத்தின் கதவு* திறக்கப்பட வேண்டும் என அறிவிப்பேன். அந்தந்த இடத்து ஆயரின் முடிவுக்கேற்ப பெரிய எண்ணிக்கையில் திருப்பயணிகளைக் கொண்ட எந்தத் திருத்தலங்களிலும் இதைப்போன்று கதவு திறக்கப்படலாம். காரணம், இத்தகைய தூய இடங்களைச் சந்திப்பதால் மனமாற்றத்திற்கான வழியை மக்கள் கண்டுணர்கின்றனர்; பெரும்பாலும் அவை அருளால் நிரப்பப்படும் நிகழ்வுகளாய் உள்ளன. இவ்வாறு, ஒவ்வொரு தனித் திருஅவையும் இப் புனித ஆண்டில் அருளின், ஆன்மிகப் புதுப்பித்தலின் சிறப்புத் தருணங்களை வாழ்ந்து காட்டுவதில் நேரடியாகப் பங்கேற்கிறது. இவ்வாறு, இந்த யூபிலி திருஅவையின் உலகளாவிய ஒன்றிப்பின் காணக்கூடிய அடையாளமாகிய உரோமையிலும் தனித் திருஅவைகளிலும் கொண்டாடப்படும்.

4. திருஅவையின் அண்மைக் கால வரலாற்றில் மிகவும் பொருள் உள்ள நாளாக டிசம்பர் 8-ஆம் நாள் உள்ளதால் நான் அந்த நாளைத் தெரிவு செய்துள்ளேன். சரியாகக் கூற வேண்டுமெனில், இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் நிறைவு பெற்ற 50-ஆம் ஆண்டு நிறைவு நாளன்று நான் தூய கதவைத் திறக்க உள்ளேன். திருஅவை இந் நிகழ்வை உயிரோட்டமுள்ளதாக வைத்திருக்க வேண்டியதன் தேவையைப் பெரிதும் உணர்கின்றது. இச் சங்கத்தின் மூலம் திருஅவை தன் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தில் நுழைந்துள்ளது. சங்கத் தந்தையர்கள் தூய ஆவியின் உண்மை மூச்சாகிய கடவுளைப் பற்றிப் பேச வேண்டிய தேவையை ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர்களுக்கு ஏற்ற காலத்தில், அவர்களுக்கு மிகவும் உகந்த வகையில், மிகவும் ஆணித்தரமாகக் கண்டார்கள். மிக நீண்ட காலமாகத் திருஅவையை ஓர் அரணைப் போன்று உருவாக்கிய சுவர்கள் இடித்துத் தள்ளப்பட்டு விட்டன; புதிய முறையில் நற்செய்தியை அறிவிக்கும் காலம் மலர்ந்து விட்டது. தொடக்கம் முதலே இருந்து வந்த அதே நற்செய்தி அறிவிப்புப் பணியின் புதிய அத்தியாயம் இது. எல்லாக் கிறிஸ்தவர்களும் மிகப் பெரிய புத்துணர்ச்சியுடனும் உறுதிப்பாட்டுடனும் தங்களது நம்பிக்கைக்குச் சான்று பகர எடுக்கப்பட்ட புதிய முயற்சி இது. திருஅவை இவ்வுலகில் தந்தையின் அன்புக்கு வாழும் ஓர் அடையாளமாக இருக்க வேண்டிய பொறுப்பை உணர்ந்துள்ளது.

சங்கம் தொடங்கியபொழுது புனித 23-ஆம் யோவான் நாம் பின்பற்ற வேண்டிய பாதையை சிந்திக்கத் தூண்டும் வார்த்தைகளால் நமக்குச் சுட்டிக் காட்டியுள்ளதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்: “இப்பொழுது கிறிஸ்துவின் மணமகள் கடுமையான ஆயுதங்களை எடுப்பதற்குப் பதிலாக இரக்கத்தின் மருந்தைப் பயன்படுத்த விரும்புகின்றாள்... கத்தோலிக்கத் திருஅவை இப் பொதுச் சங்கத்தில் தமது கத்தோலிக்க உண்மையின் சுடரை உயரே உயர்த்திப் பிடித்தாலும் எல்லாருக்கும் ஓர் அன்புத் தாயாக தம்மைக் காட்ட விரும்புகின்றாள். அவளின் பிரிந்து சென்ற பிள்ளைகள்மீது பரிவிரக்கத்தாலும் நன்மைத்தனத்தாலும் தூண்டப்பெற்று பொறுமையையும் இரக்கத்தையும் காட்ட விழைகின்றாள்.”[2] சங்கம் நிறைவுற்றபோது

2. இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் தொடக்க உரை, *தாய்த் திருஅவை மகிழ்கிறது (Gaudet Mater Ecclesia)*, 11 அக்டோபர் 1962, 2-3.



அருளாளர் ஆறாம் பவுலும் இதே தொனியில் பேசினார்: “இச் சங்கத்தின் முதன்மையான சமயக் காரணியாக எவ்வாறு பிறரன்பு இருந்து வந்துள்ளது என்பதை நாம் சுட்டிக்காட்ட விழைகின்றோம்... சங்கத்தின் ஆன்மிக மாதிரியாக நல்ல சமாரியன் பற்றிய பழைய கதை இருந்து வந்துள்ளது... மானுடத்தின் இன்றைய உலகின்மேல் பாச அலையும் பாராட்டுதலும் சங்கத்தில் வழிந்தோடின. பிறரன்பு உண்மையை வற்புறுத்துவதால்தான் தவறுகள் கண்டிக்கப்பட்டன. ஆனால், தனி நபர்களைப் பொறுத்தமட்டில் நல்லறிவு புகட்டல், மதிப்பு, அன்பு போன்றவைதான் இருந்தன. சோர்வடையச் செய்யும் நோய்களை அறுதியிட்டுக் கூறுவதற்குப் பதிலாக உற்சாகமூட்டும் நோய் தீர்க்கும் மருந்தும், அச்சம் தருகின்ற முன்அறிவிப்புகளைவிட நம்பிக்கைச் செய்தியும் சங்கத்திலிருந்து இன்றைய உலகிற்கு வழங்கப்பட்டன. இன்றைய உலகின் மதிப்பீடுகள் மதிக்கப்பட்டது மட்டுமன்றி, அவற்றிற்கு மேன்மையும் வழங்கப்பட்டது, அவற்றின் முயற்சிகள் அங்கீகரிக்கப்பட்டன; அவற்றின் பேரார்வங்கள் தூய்மையாக்கப்பட்டன, புனிதப்படுத்தப்பட்டன... நாம் இன்னொரு கருத்திற்கும் இங்கு அழுத்தம் தர வேண்டும்: இந்தச் செறிவான எல்லாப் போதனைகளும் ஒவ்வொரு நிலையிலும் – வலுவின்மையிலும் தேவையிலும் – உள்ள மானுடத்துக்குப் பணி புரிய ஒரே திசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.”[3]

திருஅவை பெற்றுக்கொண்ட ஒவ்வொன்றுக்கும் இத்தகைய நன்றியுள்ள உணர்வுகளோடும் அதற்கு முன்பாக உள்ள பணி பற்றிய பொறுப்புணர்வுகளோடும் நாம் தூய ஆவியின் வாயிற்படியை முழு நம்பிக்கையுடன் கடப்போம். நம் பயணப் பாதையில் நம்மைத் தொடர்ந்து பாதுகாத்து வரும் உயிர்த்த ஆண்டவரின் வல்லமை நம்மைக் காப்பதாக. கிறிஸ்துவினால் கொணரப்பட்ட மீட்புப் பணியில் ஒத்துழைக்க, விசுவாசிகளின் பாதையை வழிநடத்தும் தூயஆவிதாமே இறைமக்களை வழிநடத்திக் காப்பாராக. அப்பொழுதுதான் அவர்கள் இரக்கத்தின் முகத்தைத் தியானிப்பார்கள்.[4]

3. இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் இறுதிப் பொது அமர்வில் ஆற்றப்பட்ட உரை, 7 டிசம்பர் 1965.

4. காண் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்க ஏடுகள், *திருச்சபை பற்றிய கோட்பாட்டு விளக்கம்*, எண் 16; *இன்றைய உலகில் திருச்சபை பற்றிய அருள்பணிக் கோட்பாட்டு விளக்கம்*, எண் 15.

5. 2016-ஆம் ஆண்டு நவம்பர் 20-ஆம் நாள் திருவழிபாட்டில் இடம் பெறும் கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று யூபிலி ஆண்டு நிறைவுறும். எல்லாவற்றிற்கும் மேலாக, அந் நாளில் நாம் தூய கதவை மூடும்போது இரக்கத்தின் சிறப்பான தருணத்தை நமக்கு வழங்கிய போற்றுதலுக்குரிய மூவொரு கடவுளுக்கு நன்றியுணர்வால் நாம் நிரப்பப்படுவோம். திருஅவையின் வாழ்வு, மானுட முழுமை, உலக முழுமை ஆகியவற்றை நாம் கிறிஸ்துவின் ஆளுகைக்கு ஒப்படைப்போம்; காலை பனித்திவலையைப்போல அவரது இரக்கம் நம்மீது பொழியப்பட வேண்டுவோம்; அப்பொழுது ஒவ்வொருவரும் ஒளிமயமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பச் சேர்ந்து உழைப்போம். வரவிருக்கும் இவ்வாண்டு இரக்கத்தில் ஆழ்ந்து தோய்ந்ததாய் இருக்க வேண்டுமென மிகவும் ஆசைப்படுகின்றேன். அப்பொழுதுதான் நாம் வெளியே சென்று ஒவ்வோர் ஆணிடமும் பெண்ணிடமும் கடவுளின் நன்மைத்தனத்தையும் இரக்கத்தையும் கொணர முடியும். விசுவாசிகளிடமும் வெளியே இருக்கும் ஏனையோர் ஒவ்வொருவரிடமும் ஏற்கெனவே இறையாட்சி நம் நடுவில் உள்ளது என்பதன் அடையாளமாக இரக்கத்தின் நறுமணம் சென்றடைவதாக!

6. ''இரக்கத்தைச் செயல்படுத்துவது என்பது கடவுளுக்கே உரிய ஒன்று. அவர் தம் பேராற்றலைக் குறிப்பாக இவ் வகையில் வெளிப்படுத்துகின்றார்.''[5] புனித தாமஸ் அக்குவினாஸின் வார்த்தைகள் கடவுளின் இரக்கம் அவரது வலுவின்மையின் அடையாளமாய் இருப்பதைவிட அவரது பேராற்றலைக் குறிப்பதாய் உள்ளதாகக் காட்டுகின்றன. இக் காரணத்தால்தான் திருவழிபாட்டின் மிகத் தொன்மை வாய்ந்த சபை மன்றாட்டுகள் ஒன்றில் நாம் இவ்வாறு செபிக்கிறோம்: ''எல்லாம் வல்ல கடவுளே, எல்லாவற்றிற்கும் மேலாக உமது இரக்கத்திலும் மன்னிப்பிலும் உமது ஆற்றலை வெளிப்படுத்துபவரே.''[6] மானுட வரலாறு முழுவதும் கடவுள் உடனிருப்பவராக, நெருக்கமானவராக, அருள்பவராக, தூயவராக, இரக்கமுடையவராக எப்பொழுதும் இருந்து வருகிறார்.

5. தூய தாமஸ் அக்குவினாஸ், *இறையியலின் தொகுப்பு (Summa Theologiae,)* II - II, Q.30, a.4.

6. பொதுக் காலத்தின் 26-ஆம் ஞாயிறு. ஏற்கெனவே 8-ஆம் நூற்றாண்டில் இச்சபை மன்றாட்டு கிரேக்கத் திருஅவையின் திருவழிபாட்டு நூலில் இருந்தது. இத்திருவழிபாட்டு நூல் திருத்தந்தை கெலாசியன் என்பவரின் பெயரால் அழைக்கப்படுகிறது (1198).



''பொறுமையான, இரக்கமுள்ள'' எனக் கடவுளின் இயல்பை விளக்கும் இவ்விரு வார்த்தைகளும் பழைய ஏற்பாட்டில் பெரும்பாலும் சேர்ந்தே காணப்படுகின்றன. அவரது இரக்கத்தன்மை மீட்பின் வரலாறு முழுவதும் அவருடைய பல்வேறு செயல்களில் உறுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு அவரது நன்மைத்தனம் தண்டனையையும் அழிவையும் விஞ்சி நிற்கின்றது. சிறப்பான விதத்தில் திருப்பாடல்கள் அவரது இரக்கச் செயலின் பேராற்றலை முன் கொணர்கின்றன: ''அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்; உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்; அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்; அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார்'' (திபா 103:3-4). இன்னொரு திருப்பாடல் இன்னும் கூடுதலாக வெளிப்படையான வகையில் அவரது இரக்கத்திற்கு உறுதியான அடையாளங்களில் சான்று பகர்வதாய் உள்ளது: ''ஆண்டவர் ஒடுக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநாட்டுகின்றார்; பசித்திருப்போருக்கு விடுதலை அளிக்கின்றார். ஆண்டவர் பார்வையற்றோரின் கண்களைத் திறக்கின்றார்; தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார்; நீதிமான்களிடம் அன்பு கொண்டுள்ளார். ஆண்டவர் அயல் நாட்டினரைப் பாதுகாக்கின்றார்; அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கின்றார்; ஆனால், பொல்லாரின் வழிமுறைகளைக் கவிழ்த்து விடுகின்றார்'' (திபா 146:7-9). திருப்பாடல் ஆசிரியரின் இன்னும் சில கூற்றுகள் இதோ: ''உடைந்த உள்ளத்தோரைக் குணப்படுத்துகின்றார்; அவர்களின் காயங்களைக் கட்டுகின்றார்... ஆண்டவர் எளியோருக்கு ஆதரவளிக்கிறார்; பொல்லாரையோ தரைமட்டும் தாழ்த்துகின்றார்'' (திபா 147:3,6). சுருங்கக்கூறின், கடவுளின் இரக்கம் என்பது ஒரு புரியாத புதிர் அல்ல; மாறாக, அது ஓர் உறுதியான உண்மை. இதன் வழியாகத்தான் அவர் ஒரு தந்தை அல்லது தாய் தமது குழந்தைக்காக அடி ஆழத்தில் உந்தித் தள்ளுகின்ற அன்பைப் போல, தமது அன்பை வெளிப்படுத்துகின்றார். இது ''உட்கிடப்புறுப்புகள் சார்ந்த'' அன்பு எனக் கூறின் அது சிறிதளவு கூட மிகையாகாது. இது முழுமையான இன்கனிவாகவும் பரிவாகவும் பாவ மன்னிப்புச் சலுகையாகவும் இரக்கமாகவும் இயல்பாகவே அடிஆழத்தில் இருந்து பொங்கி வருகின்றது.

7. ''என்றும் உள்ளது அவரது பேரன்பு'' – கடவுளின் வெளிப்பாட்டு வரலாற்றை விவரிக்கும்போது, திருப்பாடல் 136 ஒவ்வொரு வாக்கியத்திற்குப் பின்பும் பல்லவியாக இதையே மீண்டும் மீண்டும் கூறுகின்றது. இரக்கத்தின் தன்மையினால் பழைய ஏற்பாட்டின் எல்லா நிகழ்வுகளுமே ஆழமிக்க மீட்பின் முக்கியத்துவத்தால் பொங்கி நிரம்பியுள்ளன. இஸ்ரயேல் மக்களுடனான கடவுளின் வரலாற்றை மீட்பின் வரலாறு ஓர் இரக்கத்தின் கொடையாக அளிக்கிறது. ''என்றும் உள்ளது அவரது பேரன்பு'' எனத் திருப்பாடல் தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் கூறுவது முடிவில்லா அன்பின் மறைபொருளில் எல்லாவற்றையும் புகுத்தி நேர, இடப் பரப்புகளை உடைத்துச் செல்வதாய் உள்ளது. உள்ளபடி கூற வேண்டுமெனில், வரலாற்றில் மட்டுமல்ல, உலகம் முழுமைக்கும் தந்தையின் இரக்கமுள்ள பார்வையின்கீழ்தான் மனிதன் எப்பொழுதும் இருப்பான். எனவே, ''பெரிய புகழ்ப் பாடல்'' என அழைக்கப்படும் இத் திருப்பாடலை இஸ்ரயேல் மக்கள் தங்களுடைய மிக முக்கியமான திருவழிபாட்டு விழா நாட்களில் சேர்க்க விரும்பியது ஏதோ தற்செயலாக ஏற்பட்ட ஒன்று அல்ல.

தம் பாடுகளுக்கு முன் இயேசு இந்த இரக்கத்தின் திருப்பாடலுடன்தான் செபித்தார். மத்தேயு தமது நற்செய்தியில் ''அவர்கள் (இயேசுவும் அவரின் சீடர்களும்) புகழ்ப்பாடல் பாடிவிட்டு'' (26:30) ஒலிவ மலைக்குச் சென்றார்கள் என்பது இதற்குச் சான்று என்கிறார். முடிவில்லா நினைவாகவும் தம் பாஸ்காப் பலியாகவும் அவர் நற்கருணையை நிறுவியபொழுது, தமது இரக்கத்தின் மூலம் அவர் அடையாள முறையில் இறைவெளிப்பாட்டின் மிகப் பெரும் செயலை வழங்கினார். அதே அந்த இரக்கத்தின் பின்னணியில்தான் அன்பின் மாபெரும் மறையுண்மையை அறிந்தவராய், அதைச் சிலுவையில் நிறைவேற்றுபவராய், இயேசு தம் பாடுகளையும் இறப்பையும் ஏற்றுக்கொண்டார். இயேசுதாமே இத் திருப்பாடலைப் பாடினார் என்பதை அறியும்போது கிறிஸ்தவர்களாக உள்ள நமக்கு இது இன்றும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ''என்றும் உள்ளது அவரது பேரன்பு'' – புகழ்ச்சியின் இவ் வார்த்தைகளை நாம் செபிக்கும்போது, நம் அன்றாட வாழ்வில் இப் பல்லவியை ஏற்றுக்கொள்ள அவை நமக்கு அறைகூவல் விடுக்கின்றன.



8. இயேசுவின்மீதும் அவரது இரக்கமுள்ள பார்வைமீதும் நம் கண்கள் நிலைநிறுத்தப்படும்பொழுது நாம் போற்றுதலுக்குரிய மூவொரு கடவுளின் அன்பை அனுபவிக்கின்றோம். இயேசு தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்ட பணி என்பது இறையன்பின் மறைபொருளை அதன் நிறைவான முறையில் வெளிப்படுத்துவதேயாகும். ''கடவுள் அன்பாய் இருக்கிறார்'' (1 யோவா 4:8,16) என்பதைத் திருவிவிலியத்தின் முழுமையிலும் முதன் முறையாக இங்குதான் யோவான் உறுதிப்படுத்தியுள்ளார். இயேசுவின் வாழ்வு முழுவதிலும் இவ்வன்பு காணக்கூடிய வகையிலும், தொட்டுணரக்கூடிய வகையிலும் இப்பொழுது உள்ளது. ஓர் ஆள் என்னும் முறையில் அவர் அன்பைத் தவிர வேறொன்றும் இல்லை; கைம்மாறு கருதாமல் வழங்கப்பட்ட அன்பு அவர். அவரை நாடிவரும் மக்களுடன் அவர் கொள்ளும் இந்த உறவுகள் முற்றிலும் தனிப்பட்டவையாகவும் திரும்பச் செய்ய முடியாதவையாகவும் வெளிப்படுகின்றன. அவர் நிகழ்த்திய அடையாளங்கள், குறிப்பாகப் பாவிகள், ஏழைகள், ஒதுக்கப்பட்டோர், நோயாளிகள், துன்புறுவோர் ஆகியோர் மட்டில் நிகழ்த்தியவை, அனைத்தும் இரக்கத்தைக் கற்றுக் கொடுப்பவையாக உள்ளன. அவரில் உள்ள அனைத்தும் இரக்கத்தையே பேசுகின்றன. இரக்கம் இல்லாத ஏதும் அவரில் இல்லை.

இயேசு தம்மைப் பின்பற்றிய மக்கள் கூட்டத்தைக் கண்டு, அவர்கள் ஊக்கம் இழந்து சோர்வுற்று இருந்ததையும் ஆயர் இன்றி தொலைந்துபோய் இருந்ததையும் உணர்ந்தார்; அவர்கள்மேல் அவர் மிகுந்த பரிவு கொண்டார் (காண் மத் 9:36). இத்தகைய பரிவிரக்க அன்பின் காரணமாகத்தான் அவரிடம் கொண்டுவரப்பட்ட நோயாளிகளை அவர் குணமாக்கினார் (காண் மத் 14:14); ஒரு சில அப்பத் துண்டுகளையும் மீன்களையும் கொண்டு மிகப் பெரிய மக்கள் கூட்டத்தின் பசியாற்றினார் (காண் மத் 15:37). இத்தகைய எல்லாச் சூழ்நிலைகளிலும் இயேசுவைச் செயல்பட வைத்தது இரக்கமே தவிர வேறேதும் இல்லை. இரக்கத்தினால்தான் தாம் சந்தித்தவர்களின் இதயங்களை அறிந்து, அவர்களின் மிக உள்ளார்ந்த தேவைகளுக்குப் பதிலிறுத்தார். அடக்கத்திற்காகத் தம் மகனை எடுத்து வந்த நயீன் ஊர் கைம்பெண்ணை அவர் சந்தித்தபொழுது, துயரத்தில் இருந்த அந்தத் தாய் கொண்டிருந்த அளவிடமுடியாத் துன்பத்தின் பொருட்டு அவர் மீது மிகுந்த பரிவு கொண்டார்; இறப்பிலிருந்து உயிர்ப்பித்து அவர் அவள் மகனைத்

திரும்பக் கொடுத்தார் (காண் லூக் 7:15). கெரசேனர் பகுதியில் தீய ஆவி பிடித்தவரை விடுவித்த பின்பு, இயேசு இந்த ஒரு பணியை அவனிடம் ஒப்படைத்தார்: "உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம் மீது இரக்கம் கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்" (மாற் 5:19). இரக்கத்தின் பின்னணிக்குள்தான் மத்தேயு என்பவரின் அழைப்பும் வழங்கப்பட்டுள்ளது. வரி தண்டுபவரின் சாவடி வழியாகக் கடக்கும்பொழுது மனமார்ந்த அக்கறையுடன் இயேசு மத்தேயுவைப் பார்த்தார். அது மிகுந்த இரக்கமுள்ள பார்வையாகவும், பாவியும் வரி தண்டுபவருமான அந்த மனிதனின் பாவங்களை மன்னிப்பதாயும் இருந்தது. திருத்தூதர்களின் தயக்கத்திற்கு எதிராக இயேசு இவரைத்தான் தம் 12 திருத்தூதர்களில் ஒருவராகத் தெரிவு செய்தார். வணக்கத்திற்குரிய புனித பீடு இந்த நற்செய்திப் பகுதிக்கு விளக்கம் கொடுக்கும்போது, இயேசு இரக்கம் மிகுந்த அன்பால் மத்தேயுவைப் பார்த்து அவரைத் தெரிவு செய்தார் என இவ்வாறு எழுதுகின்றார்: "*இரக்கம் கொண்டதால் அவரைத் தெரிவு செய்தார்.*"[7] இக் கூற்று என்னைக் கவர்ந்தது; ஆகவேதான் இதை நான் என் ஆயர்நிலை விருது வாக்காகத் தெரிவு செய்தேன்.

9. தவற்றை மன்னிக்கும்வரை ஓயாத ஒரு தந்தையாகவும், பரிவுடனும் இரக்கத்துடனும் ஒதுக்கப்பட்டதை வெற்றிகொள்பவராகவும் இருக்கிறார் எனக் கூறி கடவுளின் இயல்பை இரக்கத்திற்கான தம் உவமைகளில் இயேசு வெளிப்படுத்துகின்றார். இந்த உவமைகள் நமக்கு நன்கு தெரியும். குறிப்பாக, மூன்றைக் கூறலாம்: காணாமற்போன ஆடு, காணாமற்போன நாணயம், தந்தையும் இரு மகன்களும் (காண் லூக் 15:1-32). இந்த உவமைகளில், கடவுள் மன்னிக்கும்பொழுது, குறிப்பாக மகிழ்ச்சி நிறைந்தவராகவே எப்பொழுதும் அறிமுகப்படுத்தப்படுகின்றார். இவற்றில் நாம் நற்செய்தி, நமது நம்பிக்கை ஆகியவற்றின் கருவைக் காண்கிறோம்; காரணம், இதயத்தை அன்பால் நிரப்பி, மன்னிப்பின் மூலம் ஆறுதலை வழங்கி, எல்லாவற்றையும் வெற்றி கொள்ளும் சக்தியாக இரக்கம் காட்டப்படுகின்றது.

இன்னுமோர் உவமையிலிருந்து நம் கிறிஸ்தவ வாழ்விற்கான முக்கியமான ஒரு போதனையை நாம் தேர்ந்தெடுக்கலாம். எத்தனைமுறை

7. காண் *மறையுரை (Homily)* 22: CCL, 122, 149-151.



கட்டாயம் மன்னிக்க வேண்டும் என்ற பேதுருவின் கேள்விக்கு இயேசு கூறிய பதில்: "ஏழு முறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழு முறை" (மத் 18:22). அதன்பின்பு அவர், மிகப் பெரும் தொகையைத் திரும்பச் செலுத்துமாறு தன் தலைவனால் அழைக்கப்பட்டபோது, இரக்கத்திற்காக அவர் காலில் மன்றாடும் "இரக்கமற்ற பணியாளன்" பற்றிய உவமையைக் கூற ஆரம்பிக்கின்றார். அவனுடைய தலைவர் அவனது கடனைத் தள்ளுபடி செய்கிறார். ஆனால், தன்னிடம் சிறிதளவு தொகை கடன்பட்டிருந்த உடன் பணியாளரை அவன் சந்திக்கின்றான். உடன் பணியாளர் இரக்கம் வேண்டி அவன் காலில் விழுந்து கெஞ்சுகின்றார். ஆனால் முதல் பணியாளன் அவர் வேண்டுகோளை மறுத்து அவரைச் சிறையில் அடைத்தான். தலைவர் இதைப்பற்றி கேள்வியுற்றபோது சீற்றமூண்டவராய் முதல் பணியாளனைத் தம்மிடம் கொண்டு வந்து நிறுத்துமாறு கூறி, "நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா?" (மத் 18:33) என்றார். இயேசு முடிவாக, "உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்" (மத் 18:35) என்றார்.

இந்த உவமை நம் அனைவருக்கும் மிக ஆழ்ந்த போதனையைக் கொண்டுள்ளது. இரக்கம் என்பது தந்தையின் செயல்பாடு மட்டுமன்று; அவருடைய உண்மைப் பிள்ளைகள் யார் என்பதை உறுதிப்படுத்தும் அளவுகோலாகவும் அது உள்ளது என இயேசு உறுதிப்படுத்துகின்றார். சுருங்கக்கூறின், நாம் இரக்கத்தை வெளிப்படுத்த அழைக்கப்பட்டுள்ளோம்; காரணம், நமக்கு முதலில் இரக்கம் காட்டப்பட்டுள்ளது. குற்றங்களை மன்னிப்பதுதான் இரக்கமுள்ள அன்பின் மிகத் தெளிவான வெளிப்பாடாகும். கிறிஸ்தவர்களாகிய நமக்கு இது தவிர்க்க முடியாத ஒன்று; இவற்றிலிருந்து நமக்கு நாமே சாக்குப்போக்குக் கூற முடியாது. சில தருணங்களில் மன்னிப்பது மிகக் கடினமான ஒன்றாகத் தோன்றலாம். இருப்பினும், மன்னிப்புதான் மனஅமைதியைப் பெற, வலுவற்ற நம் கரங்களில் வழங்கப்பட்ட கருவி. கோபம், உளக்கொதிப்பு, வன்முறை, பழிவாங்குதல் போன்றவற்றைக் கைவிடுவது மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு இன்றியமையாத காரணிகள். எனவே "பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்"

(எபே 4:26) என்ற திருத்தூதரின் ஊக்க உரையை நாம் கவனத்தில் கொள்வோம். எல்லாவற்றிற்கும் மேலாக, இரக்கத்தை நமது வாழ்வின் பின்பற்றத்தக்க குறிக்கோள் நிலையாகவும், நமது நம்பிக்கையின் நம்பகத்தன்மைக்கான அளவுகோலுமாகச் சுட்டிக் காட்டுகின்ற "இரக்கமுடையோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" (மத் 5:7) என்ற இயேசுவின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம். இப் புனித ஆண்டில், குறிப்பாக மலைப் பொழிவின் இவ் வார்த்தைகளுக்காக நாம் ஏங்க வேண்டும்.

திரு விவிலியத்தில் நாம் காண்பது போன்று, இரக்கம் என்பதுதான் நம்மை இயக்கும் உயிர் மூலச் சொல்லாக இருந்து நம்மீது உள்ள கடவுளின் செயல்பாட்டைச் சுட்டிக் காட்டுகிறது. தமது அன்பை உறுதிப்படுத்துவதுடன் மட்டும் அவர் நின்று விடுவதில்லை; மாறாக, காணக்கூடிய முறையிலும் தொட்டுணரக்கூடிய வகையிலும் வெளிப்படுத்துகிறார். ஏனெனில், அன்பு என்பது ஒருபோதும் வெறுமனே ஒரு கருத்துப் பொருளாய் இருக்க முடியாது. அது தனது அடிப்படை இயல்பிலேயே அன்றாட வாழ்வில் வெளிப்படுத்தப்படும் உள் எண்ணங்கள், மனப்பான்மைகள், நல்லொழுக்கங்கள் போன்ற உறுதியான சிலவற்றைச் சுட்டிக் காட்டுகிறது. கடவுளின் இரக்கம் என்பது நம் ஒவ்வொருவருக்குமான அவரின் அன்பான அக்கறை. அவர் நம் நலனை விரும்புகிறார்; நம்மைச் சந்தோசத்துடனும் நிறை மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் காண விரும்புகின்றார். இத்தகைய இரக்கமுள்ள அன்புப் பாதையில்தான் கிறிஸ்தவர்கள் பயணிக்க வேண்டும். தந்தை அன்பு செய்வதைப் போலத்தான் அவருடைய பிள்ளைகளும் அன்பு செய்கின்றார்கள். அவர் இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நாமும் இரக்கமுள்ளவராய் இருக்க அழைக்கப்படுகிறோம்.

10. திருஅவையின் வாழ்வில் இரக்கம்தான் மிக முக்கியமான அடித்தளமாக உள்ளது. விசுவாசிகளுக்கு அவள் வழங்கும் மேய்ப்புப்பணி முழுவதிலும் இன்கனிவு தொடர்ந்து பின் செல்ல வேண்டும். அவளின் போதனையிலும் உலகில் அவளின் சாட்சிய வாழ்விலும் இரக்கம் சிறிதும் குறைவுபடக் கூடாது. திருஅவையின் நம்பகத்தன்மையே அவள் எந்த அளவுக்கு இரக்கத்தையும் பரிவிரக்க அன்பையும் காட்டுகின்றாள் என்பதைக் கொண்டுதான் காணப்படுகிறது. திருஅவை "இரக்கம் காட்டுவதில்



எல்லையற்ற விருப்பம் கொண்டுள்ளது."[8] இரக்கத்தின் பாதையைக் காட்டுவதையும் வாழ்வதையும் ஒருவேளை நாம் நீண்ட காலமாகத் தவறவிட்டுவிட்டோம். ஒருபுறம் நீதியின்மேல் மட்டுமே கவனம் செலுத்தும் சோதனை இன்றியமையாத, தவிர்க்கவியலாத நிலையாக இருந்தபோதிலும் இது முதலாவது நிலை மட்டும்தான் என்பதை நாம் மறக்கச் செய்து விடுகிறது. ஆனால், திருஅவை இதைக் கடந்து உயரிய, மிக முக்கியமான இலக்கைத் தேட வேண்டிய தேவையில் உள்ளது. மற்றொருபுறம் பரந்துபட்ட பண்பாட்டில் இரக்கத்தை வாழ்ந்து காட்டுவது குறைந்து கொண்டே போகிறது என்பதையும் வருத்தத்துடன் ஒத்துக்கொள்ள வேண்டும். சில சூழல்களில் இவ் வார்த்தை பயன்பாட்டில் இல்லாது தவறி விட்டது போன்று உள்ளது. இருப்பினும், இரக்கத்திற்குச் சான்று பகரவில்லையெனில் மக்களிடமிருந்து தொலையில் அமைதியாய் உள்ள, பலன்தராத பாலைவனம்போல வாழ்வு பயனற்றதாகவும் கனிதராததாகவும் மாறிவிடும். மீண்டும் ஒருமுறை இரக்கத்திற்கான மகிழ்ச்சியான அழைப்பை முன்னெடுக்கத் திருஅவைக்கு நேரம் வந்துவிட்டது. இதுவே மூலங்களுக்குத் திரும்பிச் சென்று நம் சகோதரர், சகோதரிகளின் வலுக்குறைவுகள், போராட்டங்கள் ஆகியவற்றைத் தாங்கும் தருணங்கள். இரக்கம்தான் நம்மைப் புதிய வாழ்வுக்கு மீண்டும் எழுச்சியூட்டும் சக்தியாய் உள்ளது; நம்மில் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் சந்திக்கத் தேவையான துணிவைப் படிப்படியாக அறிவுறுத்துகிறது.

11. புனித இரண்டாம் ஜான் பால் *இரக்கம் மிகுந்த கடவுள்* என்னும் தமது இரண்டாம் திருமடலில் வழங்கியுள்ள சிறந்த போதனையை நாம் மறந்துவிடக் கூடாது. யாரும் எதிர்பாரா அத் தருணத்தில் வெளியிடப்பட்ட இத் திருமடலின் ஆய்வுப்பொருள் பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. அதில் காணப்படும் இரண்டு பத்திகள்மீது குறிப்பாக என் கவனத்தைச் செலுத்த ஆசைப்படுகின்றேன். ஒன்று, புனித இரண்டாம் ஜான்பால் இன்றைய பண்பாட்டுச் சூழலில் நாம் இரக்கத்தின் ஆய்வுப்பொருளை மறந்து விட்டோம் என்ற உண்மையைத் தெளிவாக்குகிறார்: "கடந்த கால மனிதரைவிட இக் கால மனிதரின் மனப்பான்மை, இறைவன் இரக்கமுள்ளவர் என ஏற்றுக்கொள்ள மறுப்பதுபோல் தெரிகிறது. அது மட்டும் அன்று, இரக்கம் பற்றிய எண்ணத்தையே மனித வாழ்வினின்று ஒதுக்கிடவும், மனித உள்ளத்தினின்று

8. *மகிழ்ச்சியின் நற்செய்தி:* திருத்தூது ஊக்க உரை, *(Evangelii Gaudium)*, 24.

அகற்றிடவும் இம் மனப்பான்மை முனைகிறது. வரலாற்றில் இதுவரை கண்டிராத அளவுக்கு அறிவியலிலும் தொழில் நுட்பத்துறையிலும் மனிதர் கண்டிருக்கும் மாபெரும் முன்னேற்றத்தின் பயனாக மண்ணுலகின் தலைவராக மாறி, அதனைத் தம் ஆற்றலுக்கு உட்படுத்தி ஆளத் தொடங்கி விட்ட மனிதரின் மனத்தில் இரக்கம் என்னும் சொல்லும் அதன் பொருளும் அமைதியின்மையை விளைவிப்பன போன்று தெரிகிறது (காண் தொநூ 1:28). மனிதர் மண்ணுலகின்மீது கொண்டுள்ள இந்த ஆதிக்கம் சில நேரங்களில் ஒருதலைச் சார்பாகவும் மேலெழுந்தவாரியாகவும் புரிந்து கொள்ளப்படுவதன் காரணமாக, இரக்கத்திற்கே அங்கு இடம் இல்லாதது போன்று தோன்றுகிறது. இதனால்தான் திருஅவையினுடையவும் உலகினுடையவும் இன்றைய நிலையில், உயிரோட்டமுள்ள நம்பிக்கையால் தூண்டப்படும் பல தனி மனிதரும் குழுக்களும், இறைவனுடைய இரக்கத்தின்பால் திரும்புகின்றனர் என இயல்பாகவே சொல்வேன்.''[9]

மேலும், புனித இரண்டாம் ஜான் பால் சமகாலத்திய உலகில் இரக்கத்தை அறிவிப்பதற்கும் சான்று பகர்வதற்குமான மிக முக்கியத் தேவையை வலியுறுத்தினார்: ''இக் கால மனிதர் பலரின் உள்ளுணர்வுகளுக்கு ஏற்ப மனிதர்பாலும், மனிதப் பண்பு சார்ந்த அனைத்தின்பாலும் எழும் அன்பு பேரிடர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகிறது. கிறிஸ்துவின் அதே மறைபொருளில்... வெளிப்படுத்தப்பட்ட இரக்கத்தை இறைவனின் இரக்கமிகு அன்பு என அறிக்கையிடவும் இதுவே என்னைக் கடமைப்படுத்துகிறது. அது போலவே அந்த இரக்கத்தின் துணையை நாடவும் திருஅவையினுடையவும் உலகினுடையவும் வரலாற்றின் கடினமான, நெருக்கடியான கட்டத்தில் அதைக் கெஞ்சி மன்றாடவும் மேற்கூறிய மறைபொருள்தான் என்னைத் தூண்டுகிறது.''[10] இப் போதனை மற்ற காலங்களைவிட மிகவும் பொருத்தமானதாக உள்ளது. அது மீண்டும் ஒருமுறை இப் புனித ஆண்டில் எடுக்கப்படுவது ஏற்புடையதாகும். மீண்டும் ஒருமுறை அவரின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம். ''படைத்தவருடையவும் மீட்பருடையவும் மாபெரும் பண்புக்கூறான இரக்கத்தைத் திருஅவை அறிக்கையிட்டுப் பறைசாற்றும்போது – மீட்பருடைய இரக்கத்தின் ஊற்றுகளுக்கு மக்களை இட்டுச் செல்லும்போது – திருஅவை உண்மையான வாழ்வு வாழ்கிறது.''[11]

9. புனித இரண்டாம் ஜான் பால், *இரக்கம் மிகுந்த கடவுள்:* திருத்தந்தையின் சுற்றுமடல், *(Dives in Misericordia)*, 2.

10. புனித இரண்டாம் ஜான் பால், *இரக்கம் மிகுந்த கடவுள்*, 15.



12. நற்செய்தியின் இதயத் துடிப்பாகிய கடவுளின் இரக்கத்தை அறிவிக்கும் பொறுப்பு திருஅவையிடம் வழங்கப்பட்டுள்ளது. இக் கடவுளின் இரக்கம் ஒவ்வொரு நபரின் அறிவையும் இதயத்தையும் அதற்கே உரிய வகையில் ஊடுருவ வேண்டும். கிறிஸ்துவின் மணமகளாகிய திருஅவை கடவுளின் மகன் எவ்வாறு எவ்வித விதிவிலக்குமின்றி எல்லாரிடமும் சென்றாரோ, அதைப் பின்பற்றி தனது செயல்பாட்டையும் அமைக்க வேண்டும். இக் காலத்தில் திருஅவைக்குப் புதிய நற்செய்திப் பணி ஆற்றும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இரக்கத்தின் ஆய்வுப்பொருளைப் புத்தார்வத்தோடும் புத்துயிரளிக்கும் மேய்ப்புப்பணி செயல்பாட்டுடனும் மீண்டும் மீண்டும் எடுத்து வைக்க வேண்டிய தேவை திருஅவைக்கு உள்ளது. திருஅவை தனது வாழ்வின் மூலம் இரக்கத்திற்குச் சான்று பகர்வது அது அறிவிக்கும் செய்தியின் நம்பகத்தன்மைக்கு முற்றிலும் இன்றியமையாததாக உள்ளது. எல்லா மனிதர்களுடைய இதயங்களையும் தொட்டு, தந்தையை அடைவதற்கான வழியை மீண்டும் ஒருமுறை கண்டுபிடித்து, அவர்களுக்கு உயிர்ப்பூட்டுவதாய் திருஅவையின் மொழியும் செய்கைகளும் இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

கிறிஸ்துவின் அன்பே திருஅவையின் முதல் உண்மையாக உள்ளது. திருஅவை தன்னையே இவ்வன்பின் பணியாளாக மாற்றி அதை எல்லா மக்களுக்கும் ஓர் இடைநிலையாளராக பரிந்துரைக்கிறது: அது மன்னித்து, வெளிகாட்டும் அன்பாக ஒருவரின் தனித்தன்மை என்னும் கொடையில் உள்ளது. அதன் விளைவாக, எங்கெல்லாம் திருஅவை உள்ளதோ, அங்கெல்லாம் தந்தையின் இரக்கம் தெளிவாகக் காணப்பட வேண்டும். ஒரு வார்த்தையில் கூற வேண்டுமெனில், எங்கெல்லாம் கிறிஸ்தவர்கள் உள்ளார்களோ – பங்குகளில், சமூகங்களில், அமைப்புகளில், இயக்கங்களில் – அங்கெல்லாம் ஒவ்வொருவரும் இரக்கம் என்னும் பாலைவனச் சோலையைக் காண வேண்டும்.

11. புனித இரண்டாம் ஜான் பால், *இரக்கம் மிகுந்த கடவுள்*, 13.

13. *தந்தையைப் போல இரக்கமுள்ளவர்களாய்* என்னும் ஆண்டவருடைய வார்த்தைகளின் ஒளியில் இந்த யூபிலி ஆண்டை வாழ நாம் விரும்புகிறோம். இயேசுவின் போதனையை நற்செய்தியாளர் நமக்கு நினைவூட்டுகிறார். இயேசு கூறுவது: ''உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கம் உள்ளவர்களாய் இருங்கள்'' (லூக் 6:36). இது மகிழ்ச்சியிலும் அமைதியிலும் வளமார்ந்ததாக உள்ளதால், வாழ்வின் நிகழ்ச்சி நிரலாக இருக்க அழைப்பு விடுக்கிறது. யாரெல்லாம் இயேசுவின் குரலுக்குச் செவிமடுக்கத் தயாராக உள்ளார்களோ அவர்களுக்கெல்லாம் இயேசுவின் கட்டளை வழங்கப்படுகிறது. (காண் லூக் 6:27). எனவே, இரக்கத்தை நாம் பெறத் தகுதிபெறுமாறு முதலில் நாம் கடவுளின் வார்த்தைக்குச் செவிமடுக்க நம்மையே கையளிக்க வேண்டும். அதாவது, நம்மிடம் வரும் இறைவார்த்தையைத் தியானிக்க நாம் அமைதியாய் இருப்பதன் பயனை மீண்டும் கண்டுபிடிக்க வேண்டும். இதன்மூலம்தான் நாம் கடவுளின் இரக்கத்தைத் தியானிக்கவும், அதை நமது வாழ்க்கை முறையில் நமதாக ஏற்றுக்கொள்ளவும் முடியும்.

14. இப் புனித ஆண்டில் *திருப்பயணம்* செய்யும் பழக்கம் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. காரணம், இது இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் செய்யும் பயணத்தைக் குறித்துக் காட்டுகிறது. ஏனெனில் வாழ்வே ஒரு திருப்பயணம்தான்; மனிதன் ஒரு *பயணி* – தாம் விரும்பும் இலக்கை நோக்கித் தனது பாதையை அமைத்து, அப் பாதையில் பயணிக்கும் திருப்பயணி. அதேபோன்று உரோமையில் உள்ள தூய கதவை அடைய, அல்லது உலகில் உள்ள எந்த ஓர் இடத்தையும் அடைய ஒவ்வொருவரும் தமது தகுதிக்கேற்ப திருப்பயணம் மேற்கொள்ள வேண்டும். இதுவே, இரக்கமாகிய இலக்கை அடைவதற்கான அடையாளம். இதற்கு அர்ப்பணமும் தியாகமும் தேவை. எனவே, மனமாற்றத்திற்கான தூண்டுதலாக அத்திருப்பயணம் அமையட்டும். நாம் தூய கதவின் நுழைவாயிலைக் கடக்கும்போது கடவுளின் இரக்கத்தைத் தழுவ நமக்குத் தேவையான ஆற்றலைப் பெறுவோம்; தந்தை நம்மோடு இருப்பதுபோல, பிறருடன் இரக்கத்துடன் இருக்க நம்மையே நாம் அர்ப்பணிப்போம்.

நமது இலக்கை நாம் அடைந்திட, இயேசு ஆண்டவர் திருப்பயணத்தின் பாதையை நமக்குக் காட்டுகிறார்: ''பிறர் குற்றவாளிகள் எனத்



தீர்ப்பளிக்காதீர்கள்; அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள்; அப்போதுதான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள்; மன்னிப்புப் பெறுவீர்கள். கொடுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கின்றீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்'' (லூக் 6:37-38). எல்லாவற்றிற்கும் மேலாக, *தீர்ப்பளிக்க வேண்டாம்* என்றும் *கண்டிக்க வேண்டாம்* என்றும் நம்மை ஆண்டவர் கேட்கிறார். யார் கடவுளின் தீர்ப்பைத் தவிர்க்க விரும்புகின்றாரோ, அவர் தம் சகோதரர் அல்லது சகோதரியின் நீதிபதியாகத் தம்மை ஆக்கிக் கொள்ளக் கூடாது. மனிதர்கள் எப்பொழுதெல்லாம் தீர்ப்பிடுகின்றார்களோ அப்பொழுதெல்லாம் அவர்கள் மேலோட்டமாகத்தான் காண்கின்றார்களேயொழிய தொலைநோக்குப் பார்வை என்பது அவர்களிடம் இல்லை; ஆனால், தந்தையோ மனிதரின் உள் ஆழத்தைப் பார்க்கின்றார். பகை உணர்வுகளாலும் பொறாமை உணர்வுகளாலும் தூண்டப்பெற்று நாம் வார்த்தைகளைப் பயன்படுத்தும்போது, அவை எந்தளவுக்குப் பாதிப்பை உண்டாக்குகின்றன எனக் காண வேண்டும். பிறரைப் பற்றித் தவறாகப் பேசுவது என்பது அவர்களைத் தவறாகச் சித்தரித்துக் காட்டுவதாய் உள்ளது; அவர்களது புகழைக் குறைத்து வீண்பேச்சு போன்ற சபலக் கருத்துகளுக்கு அவர்களை இரையாக்குகிறது. நேர்மறையாகக் கூறின், கண்டனம், நீதித் தீர்ப்பு போன்றவற்றை வழங்குவதிலிருந்து நாம் விலகியிருக்கும்போது, ஒவ்வொரு நபரிலும் உள்ள நன்மைத்தனத்தை எப்படி ஏற்பது என்பதை நாம் அறிய முடியும்; நம் ஒருதலைப்பட்சமான நீதித் தீர்ப்பாலும், அவரைப் பற்றி அறிந்த அனைத்து முன்சார்பு எண்ணங்களாலும் அவருக்கு நேரும் அனைத்துத் துன்பங்களில் இருந்தும் அவரைப் பாதுகாக்கலாம். ஆனால், இரக்கத்தை வெளிப்படுத்த இது மட்டுமே போதுமானதல்ல. தவிர, *மன்னிக்கவும் வழங்கவுமே* இயேசு நம்மை அழைக்கின்றார். நாம் முதன் முதலில் கடவுளிடமிருந்து இரக்கத்தைப் பெற்றுக் கொண்டோம் என்பதால் நாம் இரக்கத்தின் கருவியாய் இருக்க வேண்டும். கடவுள் தமது நன்மைத்தனத்தை அளவு கடந்து தாராளமாகப் பொழிந்துள்ளார் என்பதை அறிந்து நாமும் பிறருடன் தாராளமாய் இருக்க வேண்டும்.

எனவே, *தந்தையைப்போல் இரக்கமுள்ளவர்களாய்* என்பதுதான் இப் புனித ஆண்டில் கடைபிடிக்கும் ''பொன் மொழியாக'' உள்ளது. இரக்கத்தில்தான் கடவுள் நம்மை எவ்வாறு அன்பு செய்கின்றார் என்பதற்கான சான்றைக் காண்கிறோம். அவர் எப்பொழுதும் சுதந்திரமாகவும் எதையும் எதிர்பாராமலும் தம்மையே முழுவதும் வழங்குகிறார். எப்பொழுதெல்லாம் நாம் அவரை அழைக்கின்றோமோ, அப்பொழுதெல்லாம் அவர் நமக்கு உதவ வருகின்றார். ''கடவுளே! என்னை விடுவித்தருளும், ஆண்டவரே! எனக்கு உதவி செய்ய விரைந்து வாரும்!'' (திப 70:1) என்னும் வார்த்தைகளுடன் திருஅவை தன் அன்றாடச் செபத்தைத் தொடங்குவது எவ்வளவு அருமை! நாம் கடவுளிடம் கேட்கும் துணையே அவர் ஏற்கனவே நம்மீது கொண்டுள்ள இரக்கத்தின் முதல்படியாக உள்ளது. நமது வலுவற்ற நிலையில் அவர் நமக்குத் துணைசெய்ய வருகின்றார். அவரின் உடனிருப்பையும் அவர் நம்மோடு கொண்டுள்ள நெருக்கத்தையும் நாம் ஏற்க அவரது துணை நமக்கு உதவியாய் உள்ளது. அவரது பரிவால் தொடப்பட்டு நாமும் அன்றாடம் பிறருக்குப் பரிவு காட்டுபவர்களாகின்றோம்.

15. இப் புனித ஆண்டில் நமது சமூகத்தின் கடைசி எல்லையின் விளிம்புகளில் வாழ்பவர்களுக்கு நம் இதயங்களைத் திறக்கும் அனுபவத்திற்காக நாம் காத்திருக்கின்றோம்; அந்த எல்லைகளை நவீன சமூகமே உருவாக்குகின்றது. இன்றைய உலகில் எத்தனையோ நிலையற்ற, துன்பம் நிறைந்த சூழ்நிலைகள் உள்ளன. தங்கள் குரலை எழுப்ப முடியாதவர்கள் தங்களது உடலில் தாங்கும் காயங்கள் எத்தனையோ உள்ளன. காரணம், அவர்களின் குரல் பணக்காரர்களின் அக்கறையின்மையின் காரணமாக அடக்கப்பட்டுள்ளது, மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இந்த யூபிலியின்போது இத்தகைய காயங்களை அதிகமாகக் குணமாக்கவும், ஆறுதலின் எண்ணெயால் அவர்களின் வலியைத் தணிக்கவும், இரக்கத்துடன் அவர்களை இறுகப்பற்றிக்கொள்ளவும், தோழமை உணர்வுடனும் விழிப்புள்ள கவனத்துடனும் அவர்களைக் குணமாக்கவும் திருஅவை அழைக்கப்படும். எது புதுமையானதோ அதைக் கண்டுபிடிப்பதில் நம்மைத் தடுக்கின்ற மதிப்பிழக்கச் செய்யும் அக்கறையின்மையிலோ அல்லது சலிப்பூட்டுகின்ற நடைமுறை ஒழுங்கிலோ நாம் வீழ்ந்துவிடக் கூடாது. அழிவு உண்டாக்கக் கூடிய வெறுப்பு மனப்பான்மையை நாம் தடுத்து விலக்குவோம். உலகின் துன்பங்களையும்



மாண்பு மறுக்கப்பட்ட நம் சகோதரர், சகோதரிகளின் காயங்களையும் நாம் நம் திறந்த கண்களால் பார்ப்போம். உதவிக்கான அவர்களின் குரலைக் கருத்திற்கொள்ள நாம் கட்டாயப்படுத்தப்படுகிறோம் என்பதைக் கண்டுணர்வோம். நாம் அவர்களைச் சென்றடைந்து அவர்களுக்கு உதவி செய்வோம். அப்பொழுது அவர்கள் நமது உடனிருப்பின், நமது நட்பின், நமது தோழமையின் அன்பை உணர்வார்கள். அவர்களது அழுகுரல் நம்முடையதாகட்டும். அப்பொழுது நாம் அவர்களுடன் இணைந்து, அவ்வப்போது தலைவிரித்தாடும் அக்கறையின்மையாகிய தடைகளையும் பொய்முகத்தால் மூடப்பட்ட நம் தன்னலத்தையும் பாசாங்கையும் உடைத்தெறிவோம்.

இந்த யூபிலியின்போது கிறிஸ்தவ மக்கள் *உடல், ஆன்மிகம் சார்ந்த இரக்கச் செயல்களைப்* பற்றி சிந்திக்க வேண்டும் என்பது என் மனவெழுச்சிமிக்க ஆர்வமாய் உள்ளது. ஏழ்மையின் சூழலில் அடிக்கடி எழுச்சியற்ற நிலைக்குத் தள்ளப்படும் நமது உளச் சான்றை அது மீண்டும் எழுச்சியடையச் செய்ய வழிவகுக்கும். இவ்வாறு ஏழைகள் கொண்டுள்ள சிறப்பு அனுபவமாகிய கடவுளின் இரக்கத்தைப் பற்றிய நற்செய்தியின் இதயத்திற்குள் நாம் இன்னும் ஆழமாக நுழைவோம். இயேசு தமது போதனையில் இத்தகைய இரக்கத்தின் செயல்பாடுகளை நமக்கு அறிமுகப்படுத்துகிறார். அதுவே அவருடைய சீடர்களாக நாம் வாழ்கின்றோமா இல்லையா என்பதை நமக்கு உணர்த்தும். பசித்திருப்பவருக்கு உணவு கொடுத்தல், தாகமாய் இருப்பவருக்குத் தண்ணீர் கொடுத்தல், ஆடையின்றி இருப்பவருக்கு உடை உடுத்தல், அந்நியரை வரவேற்றல், நோயாளியைக் குணமாக்கல், சிறையிலிருப்போரைச் சந்தித்தல், இறந்தவரை அடக்கம் செய்தல் போன்ற *உடல் சார்ந்த இரக்கச் செயல்களையும்* நாம் மீண்டும் கண்டுபிடிப்போம். தன்னம்பிக்கையற்றவர்களுக்கு ஆலோசனை கூறுதல், அறியாமையில் உள்ளவர்களுக்குக் கற்பித்தல், பாவிகளை நன்னெறிப்படுத்துதல், துயருற்றோருக்கு ஆறுதலளித்தல், குற்றங்களை மன்னித்தல், நமக்குத் தீங்கு செய்வோரைப் பொறுமையாக ஏற்றுக்கொள்ளல், இறந்தோருக்காகவும் வாழ்வோருக்காகவும் செபித்தல் போன்ற *ஆன்மிகம் சார்ந்த இரக்கச் செயல்களையும்* நாம் மறவாதிருப்போமாக! நமக்கு வழங்கப்பட்டுள்ள ஆண்டவரின்

வார்த்தைகளில் இருந்து நாம் தப்பிக்க முடியாது. பசியோடு இருந்தவர்களின் பசி தீர்த்தோமா, தாகத்தோடு இருந்தவர்களின் தாகம் தணித்தோமா, அந்நியர்களை வரவேற்றோமா, ஆடையின்றி இருந்தவர்களை உடுத்தினோமா, அல்லது நோயுற்றவர்களுடனோ சிறையிலிருந்தவர்களுடனோ நாம் நேரம் செலவிட்டோமா போன்றவைதான் நாம் தண்டிக்கப்படுவதற்கான அளவுகோல்களாகப் பயன்படும் (காண் மத் 25:31-45). மேலும், தனிமைக்குக் காரணமாக பெரும்பாலும் உள்ள நம்பிக்கை இழப்பில் வீழ்வதற்குக் காரணியாக உள்ள மனவுறுதியின்மையில் இருந்து பிறர் விடுபட நாம் உதவி செய்துள்ளோமா என்றும், ஏழ்மையின் கட்டுகளில் இருந்து தங்களையே விடுவிக்கத் தேவையான இன்றியமையாக் காரணிகள் மறுக்கப்பட்ட இலட்சக்கணக்கானவர்கள், குறிப்பாகக் குழந்தைகள், தங்களின் அறியாமையிலிருந்து மீண்டுவர நாம் உதவியுள்ளோமா எனவும், தனிமையிலும் துன்பத்திலும் உள்ளவர்களுடன் நாம் நெருக்கமாக உள்ளோமா எனவும், நம்மைக் காயப்படுத்தியவர்களை மன்னித்து விட்டோமா எனவும், வன்முறைக்கு இட்டுச் செல்லும் கோபம், வெறுப்புணர்வு ஆகியவற்றின் அனைத்து வடிவங்களையும் மறுத்துவிட்டோமா எனவும், நம்முடன் மிகவும் பொறுமையாய் உள்ள கடவுள் காட்டும் அதே பொறுமையை நாம் கொண்டுள்ளோமா எனவும், செபத்தில் நம் சகோதரர், சகோதரிகளை ஆண்டவரிடம் அடைக்கலமாக ஒப்படைத்துள்ளோமா எனவும் கேட்கப்படுவோம். இத்தகைய ''சிறிய காரியம்'' ஒவ்வொன்றிலும் கிறிஸ்துவே உடனிருக்கின்றார். அவரின் உடல் துன்புறுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட, அடிக்கப்பட்ட, சத்துக் குறைவான உணவூட்டப்பட்ட, நாடு கடத்தப்பட்ட நபர்களின் உடலில் பார்க்கக் கூடிய வகையில் உள்ளது... அவை நம்மால் ஏற்றுக் கொள்ளப்படவும், தொடப்படவும் அக்கறை கொள்ளப்படவும் வேண்டும். ''இவ்வுலக வாழ்க்கையை விட்டுச் செல்ல நம்மையே நாம் தயாரிக்கும்போது அன்பின் அடிப்படையிலேயே நாம் நீதித் தீர்ப்பு வழங்கப்படுவோம்''[12] என்ற புனித சிலுவை யோவானின் வார்த்தைகளை நாம் மறவாதிருப்போம்.

12. *அன்பின், ஒளியின் வார்த்தைகள் (Words of Light and Love)*, 57.



16. நம்பிக்கையுடன் யூபிலியை நாம் வாழ லூக்கா நற்செய்தியில் காணும் இன்னொரு முக்கியமான காரணி நமக்கு உதவியாய் இருக்கும். ஓய்வு நாளன்று இயேசு நசரேத்துக்கு திரும்பிச் சென்று தமது வழக்கப்படி தொழுகைக்கூடத்தில் நுழைந்ததாக லூக்கா எழுதுகிறார். திருவிவிலியத்தை வாசிக்கவும் அதற்கு விளக்கவுரை அளிக்கவும் அவரை அழைத்தார்கள். எசாயாவின் நூலில் இவ்வாறு எழுதப்பட்ட பகுதி இருந்தது: ''ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது; ஏனெனில், அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார்; ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார்'' (எசா 61:1). ''ஆண்டவரின் கருணையின் ஆண்டு'' அல்லது ''இரக்கம்'' - இதுதான் ஆண்டவர் முழக்கமிட்டு அறிவித்தது; இதைத்தான் நாம் இப்பொழுது வாழ விரும்புகின்றோம். இறைவாக்கினரின் வார்த்தைகளில் எதிரொலித்த நிறைவான இயேசுவின் பணியை இப் புனித ஆண்டு முன்னிலைக்குக் கொண்டு வரும்: அதாவது, ஏழைகளுக்கு வார்த்தையாலும் செய்கையாலும் ஆறுதல் கொணர்தல், நவீன சமூகத்தில் புதிய வடிவிலான அடிமைத்தனத்தால் கட்டுண்டுள்ளவர்களுக்கு விடுதலைச் செய்தியை அறிவித்தல், தங்களுக்குள் சிக்குண்டுபோனதால் பார்க்க இயலாதவர்களுக்கு பார்வை வழங்குதல், மாண்பு பறிக்கப்பட்ட அனைவருக்கும் மீண்டும் மாண்பு வழங்குதல் போன்றவை. கிறிஸ்தவர்கள் தங்களது சான்று வாழ்வு மூலம் தங்களது நம்பிக்கைக்குப் பதிலிறுக்க அழைக்கப்படுவதன் மூலம் இயேசுவின் போதனையை மீண்டும் ஒருமுறை காணக்கூடிய வகையில் செய்கிறார்கள். இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்யட்டும் (காண் உரோ 12:8) என்ற திருத்தூதரின் வார்த்தைகள் நம்மைப் பின்தொடரட்டும்.

17. இந்த யூபிலி ஆண்டின் தவக்காலம் கடவுளின் இரக்கத்தை அனுபவித்துக் கொண்டாடும் சிறப்புத் தருணமாக அமைய அது மிக ஆர்வத்தோடு வாழப்பட வேண்டும். திருவிவிலியத்தின் பல பகுதிகள் தந்தையின் இரக்கமான முகத்தை நாம் மீண்டும் கண்டுபிடிக்கவும், தவக்கால வாரங்களின்போது தியானிக்கவும் பொருத்தமானவையாக உள்ளன.

‘ஆண்டவரே, நீரே எங்கள் நேர்மையற்றதன்மையை எடுத்துவிட்டு பாவங்களை மன்னிக்கும் கடவுளாய் உள்ளீர்; நீர் உமது சினத்தில் என்றென்றும் நிலைத்திருப்பதில்லை; ஏனெனில் நீர் இரக்கம் காட்டுவதில் விருப்பமுடையவர். நீரே, ஆண்டவரே, எங்களிடம் திரும்பி வந்து உம் மக்கள்மீது கருணை காட்டுவீர். நீர் எங்கள் பாவங்களை மிதித்துப் போடுவீர்; அவற்றை ஆழ்கடலில் எறிந்து விடுவீர்’ (காண் மீக்கா 7:18-19).

செபம், நோன்பு, இரக்கச் செயல்கள் ஆகியவற்றைச் செய்யும் இக் காலத்தின்போது இறைவாக்கினர் எசாயாவின் பகுதிகளை நாம் அதில் காணப்படுவது போன்று தியானிக்கலாம்: “கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு! பசித்திருப்போருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும், பிறரிடமிருந்து உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! அப்பொழுது உன் ஒளி விடியல்போல் எழும்; விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும்; உன் நேர்மை உனக்கு முன் செல்லும்; ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின்சென்று காக்கும். அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய்; அவர் உனக்குப் பதிலளிப்பார்; நீ கூக்குரல் இடுவாய்; அவர் ‘இதோ! நான்’ என மறுமொழி தருவார். உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும்; இருண்ட உன் நிலை நண்பகல்போல் ஆகும். ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார்; வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார்; உன் எலும்புகளை வலிமையாக்குவார்; நீயும் நீர் பாய்ந்த தோட்டம்போலும், ஒருபோதும் வற்றாத நீரூற்றுப்போலும் இருப்பாய்” (எசா 58:6-11).

*“ஆண்டவருக்காக 24 மணி நேரம்”* - தவக்காலத்தின் நான்காம் வாரத்திற்கு முன்வரும் வெள்ளி, சனி ஆகிய நாள்களில் கொண்டாடப்படவிருக்கும் இம் முயற்சி எல்லா மறைமாவட்டங்களிலும்



நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பலரும், குறிப்பாக இளைஞர்கள், ஒப்புரவு அருளடையாளத்திற்குத் திரும்பி வந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த அனுபவத்தின் மூலம் அவர்கள் வாழ்வின் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதாலும் முனைப்பான செபத் தருணத்தை வாழ்வதாலும் கடவுளிடம் திரும்பிவரும் பாதையை மீண்டும் கண்டுபிடிக்கின்றார்கள். மக்கள் தங்கள் சொந்தக் கரங்களால் கடவுளின் பேராற்றலுள்ள இரக்கத்தைத் தொட்டு உணர்வதற்கு வழிவகை செய்யும் ஒப்புரவு அருளடையாளத்தை மீண்டும் ஒரு முறை மையத்திற்குக் கொண்டு வருவோம். மனம் வருந்துகின்ற ஒவ்வொருவருக்கும் இது உண்மையான உள் அமைதியைத் தரும் ஊற்றாக இருக்கும்.

ஒப்புரவு அருளடையாளம் வழங்குபவர்கள் கடவுளுடைய இரக்கத்தின் உண்மையுள்ள அடையாளங்களாக இருக்க வேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுப்பதில் இருந்து நான் ஒருபோதும் சோர்வடைய மாட்டேன். நம் இயல்பிலேயே நாம் சிறந்த முறையில் ஒப்புரவு அருளடையாளம் வழங்குபவர்களாக மாறுவதில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, எப்பொழுது நம் தவறுகளுக்காக வருந்துகின்றவர்களாக நாம் இருந்து அவரது இரக்கத்தைத் தேடுகின்றோமோ அப்பொழுதுதான் நாம் நல்ல முறையில் ஒப்புரவு அருளடையாளம் வழங்குபவர்களாக மாற முடியும். ஒப்புரவு அருளடையாளம் வழங்குபவர்கள் தாங்களும் இயேசுவின் அதே பணியில் பங்குபெறுகிறார்கள் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது; அவர்கள் மன்னிக்கும், மீட்கும், இடைவிடா இறையன்பின் உறுதியான அடையாளங்களாய் உள்ளனர். அருள்பணியாளர்களாகிய நாம் பாவங்களை மன்னிப்பதற்கான தூய ஆவியின் அருளைப் பெற்றுள்ளோம்; எனவே, அதற்குப் பொறுப்பானவர்களாய் நாம் உள்ளோம். நம்மில் யாரும் இந்த அருளடையாளத்தின்மேல் அதிகாரம் கொண்டு செயல்பட முடியாது; மாறாக, இவ்வருளடையாளத்தின் வழியாக கடவுளுடைய இரக்கத்தின் உண்மைப் பணியாளர்களாய் உள்ளோம். ஒப்புரவு அருளடையாளம் வழங்கும் ஒவ்வொருவரும் ஊதாரி மகன் உவமையில் வரும் தந்தையைப்போன்று அதாவது, தன் சொத்தை வீண் செலவு செய்தவன் என்னும் உண்மை இருப்பினும், தம் மகனைத் தேடிச் சென்று சந்திக்கும் தந்தையைப்போன்று விசுவாசிகளை ஏற்க வேண்டும். ஒப்புரவு அருளடையாளம் வழங்குபவர்கள்

மனம்மாறி வீட்டிற்குத் திரும்பி வரும் மகனை கட்டித் தழுவவும், மீண்டும் அவரைத் திரும்பப் பெற்றதன் மகிழ்ச்சியைக் கொண்டாட முடியாமல் வெளியே நிற்கும் மகனிடம் சென்று, நம் தந்தையின் எல்லையில்லா இரக்கத்தின் முன்னிலையில் அவனுக்கு வழங்கப்பட்ட நீதித் தீர்ப்பு கடுமையானது, அநீதியானது, அர்த்தமற்றது என விளக்குவதில் ஒருபோதும் சோர்வடையாதிருப்போமாக. ஒப்புரவு அருளடையாளம் வழங்குபவர்கள் பயனற்ற கேள்விகளைக் கேட்காமல் இருப்பார்களாக. ஆனால், உவமையில் வரும் தந்தையைப் போன்று ஊதாரி மகனால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உரையைத் தடுத்து நிறுத்துவார்களாக. அப்பொழுது ஒப்புரவு அருளடையாளம் வழங்குபவர்கள் தவறுக்காக வருந்துகின்ற ஒவ்வொருவரின் உதவிக்கான அறைகூவலை ஏற்று அவரது இதயத்தில் வழிந்தோடும் இரக்கத்தைக் கற்றுக்கொள்வார்கள். சுருங்கக்கூறின், ஒப்புரவு அருளடையாளம் வழங்குபவர்கள் எப்பொழுதும், எல்லா இடத்திலும், எந்தச் சூழல் என்னும் விதிவிலக்கும் இல்லாமல் இரக்கத்தின் முதன்மை அடையாளமாக இருக்க அழைக்கப்பட்டுள்ளார்கள்.

18. இப் புனித ஆண்டில் தவக்காலத்தின்போது *இரக்கத்தின் மறைத்தூதுப் பணியாளர்களை* அனுப்ப விழைகின்றேன். அவர்கள் கடவுளின் மக்களுக்காக திருஅவையின் தாய்க்குரிய உள்ளார்ந்த அக்கறையின் அடையாளமாய் இருப்பார்கள். நம்பிக்கைக்கு மிக அடிப்படையாய் உள்ள மிக ஆழ்ந்த செறிவான இந்த மறைபொருளில் கடவுளின் மக்கள் நுழைய அவர்கள் வழிசெய்வார்கள். திருத்தந்தையால் மட்டுமே பாவமன்னிப்பு வழங்கப்படக்கூடிய சில பாவங்களை மன்னிப்பதற்கான அதிகாரத்தை நான் சில அருள்பணியாளர்களுக்கு வழங்குவேன். அப்பொழுதுதான் ஒப்புரவு அருள்பணியாளர் என்னும் வகையில் அவர்களுக்குரிய ஆணையின் பரந்த மனப்பாங்கு தெளிவாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் மன்னிப்பைத் தேடுவோரை வரவேற்கத் தயாராக உள்ள தந்தையின் வாழும் அடையாளங்களாக இருப்பார்கள். அவர்கள் இரக்கத்தின் மறைத்தூதுப் பணியாளர்களாகத் தடைகளைத் தாண்டவும், மீண்டும் திருமுழுக்காகிய புதிய வாழ்வைப் பெறவும் மிகுந்த பொறுப்புள்ளவர்களாக இருப்பார்கள். காரணம், அவர்கள்தான் விடுதலைக்கு மூலமாகவும் உண்மையான மானிடச் சந்திப்புக்கு



உதவியாளர்களாகவும் இருப்பார்கள். ‘‘ஏனெனில், இரக்கம் காட்டுவதற்காகவே கடவுள் அனைவரையும் கீழ்ப்படியாமைக்கு உட்படுத்தினார்’’ (உரோ 11:32) என்னும் திருத்தூதர்களின் வார்த்தைகளால் அவர்களின் பணியில் அவர்கள் நடத்தப்படுவார்கள். உண்மையைக் கூற வேண்டுமெனில், எவ்வித விதிவிலக்குமின்றி நாம் ஒவ்வொருவரும் இரக்கத்திற்கான அழைப்பைத் தழுவ அழைக்கப்பட்டுள்ளோம். இந்த மறைத்தூதுப் பணியாளர்கள் ‘‘கடவுள் பணியில் இரக்கமும் நம்பிக்கையும் உள்ள தலைமைக் குரு’’வான (எபி 2:17) இயேசு கிறிஸ்துமேல் தங்கள் கண்களைப் பதித்து இந்த அழைப்பை உறுதிப்பாட்டுடன் வாழ்வார்களாக!

இந்த மறைத்தூதுப் பணியாளர்களை அழைக்கவும் வரவேற்கவும் என் சகோதர ஆயர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான் அவர்கள் எல்லாவற்றிற்கும் மேலாக, இரக்கத்தைத் தூண்டி எழுப்புகின்ற மறையுரையாளர்களாக இருக்க முடியும். எனவே, மறைமாவட்டங்கள் தனித்தனியே ‘‘மக்களுக்குரிய மறைப்பணிகளை’’ ஏற்பாடு செய்வனவாக. இப் பணியில் இந்த மறைத்தூதுப் பணியாளர்கள் மகிழ்ச்சி, மன்னிப்பு ஆகியவற்றின் தூதுவர்களாக இருப்பார்களாக. ஆயர்கள் தங்கள் மக்களுடன் சேர்ந்து ஒப்புரவு அருளடையாளத்தைக் கொண்டாடக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அப்பொழுதுதான் யூபிலி ஆண்டு வழங்கும் அருளின் காலம் கடவுளின் மகன்கள், மகள்கள் பலருக்கும் தந்தையின் வீட்டை நோக்கி மீண்டும் ஒருமுறை பயணம் மேற்கொள்ள வழிவகுக்கக் கூடியதாய் இருக்கும். சிறப்பாக, திருவழிபாட்டு காலத்தின் தவக்காலத்தின்போது ‘‘நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்லவும்’’ (எபி 4:16) இறைமக்களை மீண்டும் அழைப்பதில் மேய்ப்பர்கள் ஊக்கம் தளராமல் இருக்க வேண்டும்.

19. இரக்கத்தின் செய்தி ஒவ்வொருவரையும் சென்றடைவதாக! இரக்கத்தை அனுபவிக்க விடுக்கப்படும் அழைப்புக்கு யாரும் கவலையற்றவர்களாக இருக்க வேண்டாம்! யாருடைய நடத்தை கடவுளின் இரக்கத்தில் இருந்து அவர்களைத் தள்ளி வைக்கின்றதோ, அவர்கள் கூடுதல் ஆர்வத்துடன் மனமாற்றம் பெற நான் இந்த அழைப்பைத் தருகின்றேன்.

சட்டத்தை மீறுகின்ற எல்லா வகையான நிறுவனங்களையும் சார்ந்த ஆண்களையும் பெண்களையும் என் மனத்தில் குறிப்பாகக் கொண்டுள்ளேன். தங்கள் சொந்த நலனைக் கருதி அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக் கொள்ள நான் கெஞ்சுகின்றேன். பாவத்தை மறுக்கும், பாவியை ஒருபோதும் மறுக்காத கடவுளுடைய மகனின் பெயரால் நான் இதை அவர்களிடம் கேட்கிறேன். வாழ்வு பணத்தைப் பொறுத்தே அமைந்துள்ளது; பணத்துடன் ஒப்பீடு செய்யும்போது வேறு எதுவும் மதிப்போ, மாண்போ அற்றது என்னும் தவறான சிந்தனை வலையில் வீழ்ந்து விடாதீர்கள். இது ஒரு பொய்த் தோற்றமே தவிர வேறொன்றும் இல்லை. இவ்வுலக வாழ்வைக் கடந்து நாம் பணத்தை நம்முடன் எடுத்துச் செல்ல முடியாது. பணம் நமக்கு மகிழ்ச்சியைக் கொணர்வதில்லை. இரத்தத்தில் தோய்க்கப்பட்டு பேரளவில் குவிக்கப்படும் சொத்துக்களுக்காக வன்முறை சுமத்தப்படுவதென்பது ஒருவரை ஆற்றலற்றவராகவும் ஒழுக்கமற்றவராகவும் மாற்றுகிறது. அண்மையிலோ, காலம் கடந்தோ ஒவ்வொருவரும் கடவுளின் நீதித் தீர்ப்புக்கு உட்படுத்தப்படுவோம்; யாரும் அதிலிருந்து தப்ப இயலாது.

இலஞ்ச ஊழல் பழக்கத்தில் பங்கேற்போர்க்கும் குற்றஞ் செய்வோருக்கும் இதே அழைப்புதான் வழங்கப்படுகின்றது. இந்த அழுகிய புண் பழி தீர்ப்பதற்காக விண்ணகத்தை நோக்கிக் குரல் எழுப்பும் சாவான பாவமாக உள்ளது. காரணம், இது தனிப்பட்ட, சமூக வாழ்வின் அடிப்படைகளையே அச்சுறுத்துகின்றது. இலஞ்ச ஊழல் பழக்கம் நம்பிக்கையுடன் நாம் எதிர்காலத்தைக் நோக்குவதற்குத் தடையாக உள்ளது. காரணம், இதன் கொடுங்கோன்மைப் பேராசை வலுவற்றவர்களின் திட்டங்களைச் சிதைக்கிறது; ஏழைகளுக்கெல்லாம் ஏழைகளை நசுக்குகிறது. இது சமூகத்தின் பெரிய அவதூறுக்குக் காரணமாகி அன்றாட வாழ்வுச் செயல்களை தனக்குள் சூழ்ந்தணைகின்ற பாவமாய்ப் பரவுகிறது. இலஞ்ச ஊழல் இதயத்தைக் கடினப்படுத்தும் பாவச் செயல்; இது கடவுளுக்குப் பதிலாக பணம்தான் சக்தியின் வடிவம் என்னும் பொய்த் தோற்றத்தை உருவாக்குகிறது. இது கபடச் செயல், அவநம்பிக்கை போன்றவற்றால் ஊட்டப்பெற்ற இருளின் வேலையாக உள்ளது. இத்தகைய சோதனையில் இருந்து யாரும் தம்மைத் தடைக்காப்புறுதி பெற்றவர் என நினைக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தி, தூய பெரிய கிரகோரி நல்லெண்ணத்துடன் கூறியது: *இலஞ்ச ஊழல்தான் மிக மோசமான இடர்.* நாம் தனிப்பட்ட, சமூக வாழ்வில் இருந்து இதை விரட்ட விரும்பினால், எந்தத் தவறான செயலுக்கும் வெளிப்படையாய் கண்டனம் தெரிவிப்பதோடு நமக்கு முன்மதி, விழிப்பு, வாய்மை தவறாமை, ஒழிவின்மை போன்றனவும் தேவை. இதை வெளிப்படையாக எதிர்த்துப் போராடப்படவில்லையெனில் விரைவிலோ அல்லது காலம் தாழ்த்தியோ அதற்கு நாம் ஒவ்வொருவரும் உடந்தையாய் இருப்பவராய் மாறிவிடுவோம்; மேலும், அது நமது இருப்பையே அழித்து முடிவுக்குக் கொண்டு வந்து விடும்.

நம் வாழ்வை மாற்றுவதற்கான சரியான தருணம் இதுவே. நம் இதயங்கள் தொடப்பட அனுமதிக்கப்படுதற்கான காலம் இதுவே. மோசமான குற்றங்களுக்கு மத்தியிலும் நாம் தீமையான செயல்களைச் சந்திக்கின்றபோது, அப்பாவி மக்களின் சொத்து, மாண்பு, உணர்வு, ஏன் அவர்கள் வாழ்வு முழுவதும் பிடுங்கப்பட்ட நிலையில் அவர்கள் அழுகுரலுக்கு நாம் செவிமடுக்கும் நேரம் இது. தீமையான பாதையில் ஒட்டிக்கொண்டிருப்பது ஒருவனை ஏமாற்றத்திற்கும் மயக்கத்திற்கும்தான் இட்டுச் செல்லும். உண்மையான வாழ்வு என்பது சற்று முற்றிலும் மாறுபட்ட ஒன்று. நம்மை அடைவதில் கடவுள் ஒருபோதும் சோர்ந்து போவதில்லை. நான் என் சகோதர ஆயர்களுடனும் அருள்பணியாளர்களுடனும் இருப்பது போன்று, கடவுள் எப்பொழுதும் கேட்பதற்குத் தயாராய் உள்ளார். எல்லாரும் செய்ய வேண்டியது ஒன்றே. எல்லாரும் மனமாற்றத்திற்கான அழைப்பை ஏற்று, திருஅவையால் வழங்கப்படும் இரக்கத்தின் இந்தச் சிறப்புக் காலத்தின்போது நீதிக்குத் தன்னையே கையளிப்பதாகும்.

20. *நீதிக்கும் இரக்கத்திற்கும்* இடையேயுள்ள உறவை மீண்டும் நினைவு கூர்வது இவ்விடத்தில் பொருந்தாத ஒன்றல்ல. இவை இரண்டுமே முரண்பாடான உண்மைகள் அல்ல; ஆனால், அவை அன்பின் நிறைவை அடையும்வரை படிப்படியாக வளர்ச்சியுறுகின்ற ஒரே உண்மையின் இரண்டு பரிமாணங்கள். நீதி என்பது சட்ட முறைமைப்படி ஆட்சி செய்யப்பட வேண்டிய குடிமைச் சமூகத்திற்கான அடிப்படை கருத்துப்படிவம். அது ஒவ்வொரு தனி நபருக்கும் முறையாக உரியதாகவும் புரியப்படுகின்றது. திருவிவிலியத்தில் இறை நீதி பற்றியும் இறைவனை ''நீதிபதி''யாகவும் குறிப்பிடும் பல குறிப்புகள் உள்ளன. இந்தப் பக்கங்களில் நீதி என்பது சட்டத்தை முழுவதும்

கடைப்பிடிப்பதாகவும் கடவுளின் கட்டளைகளுக்கு உகந்த முறையில் ஒவ்வொரு நல்ல இஸ்ரயேலரின் ஒழுக்க வாழ்வு இருக்கவேண்டியதாயும் புரியப்படுகின்றது. இருப்பினும், இத்தகைய பார்வை நீதியின் உண்மையான அர்த்தத்தைச் சிதைவுபடுத்தியோ, அதன் மிக ஆழ்ந்த மதிப்பைத் தடுத்தோ ஒருபோதும் சட்டத்தின் கெடுபிடித்தன்மைக்கு இட்டுச் சென்றதில்லை. இந்த சட்டக் கெடுபிடித்தன்மையை வெல்ல வேண்டுமெனில் திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ளதுபோல் நீதி என்பது அடிப்படையிலேயே கடவுளின் விருப்பத்திற்கு ஒருவர் பிரமாணிக்கமுடன் தம்மையே கையளிப்பதாய் காணப்பட வேண்டும் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

இயேசு தமது பங்கிற்குச் சட்டத்தைக் கடைபிடிப்பதற்கு மேலாக இறைநம்பிக்கையின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பல முறை பேசியுள்ளார். மத்தேயுவுடனும் ஏனைய வரிதண்டுவோருடனும் பாவிகளுடனும் மேசையில் சாய்ந்த வண்ணம் இருந்தபோது இயேசுவுக்கு எதிராக மறுப்புத் தெரிவித்த பரிசேயர்களுக்கு இயேசு கூறும் பின்வரும் இந்த வார்த்தைளை நாம் மேற்கண்ட பார்வையில்தான் புரிந்துகொள்ள வேண்டும்: "'பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்' என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; ஏனெனில் நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" (மத் 9:13). நீதியின் பார்வைக்கு முன்பாக வெறுமனே சட்டத்தைக் கடைப்பிடித்தல் மூலம் மக்களை நீதிமான்கள், பாவிகள் எனச் சாதாரணமாகத் தீர்ப்பிட்டு, இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இயேசு பாவிகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுக்கு மன்னிப்பும் மீட்பும் வழங்கி இரக்கத்தின் மாபெரும் கொடையை வெளிப்படுத்துவதில் உறுதியாய் உள்ளார். இயேசு பரிசேயர்களாலும் ஏனைய மறைநூல் ஆசிரியர்களாலும் ஒதுக்கப்பட்டதற்கான காரணம் அவர் புதிய வாழ்வின் ஊற்றாகிய இரக்கம்பற்றி கொண்டிருந்த விடுதலைப் பார்வையே. சட்டத்திற்குப் பிரமாணிக்கமாய் இருக்கும் முயற்சியில் தந்தையின் இரக்கத்தைக் குறைத்து மதிப்பிட்டு அவர்கள் பிறரின் தோள்கள்மீது வெறுமனே சுமைகளை ஏற்றினார்கள். ஆனால், சட்டத்தைப் பிரமாணிக்கமாய் கடைப்பிடிக்க வலியுறுத்துவது மனித மாண்பைத் தொடக்கூடிய காரியங்களுக்கு வழங்கப்படும் கவனத்தைத் தடுப்பதாக இருக்கக் கூடாது.



இந்த நோக்கில் "பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன்" (ஓசே 6:6) என்ற இறைவாக்கினர் ஓசேயாவின் நூலில் உள்ள இப் பகுதியை இயேசு தாமே வேண்டுகோளாக வைப்பது முக்கியமானது. இயேசு தாமே பாவிகளுடன் உணவைப் பகிர்ந்து வெளிப்படுத்தியதுபோன்று அந்நேரத்தில் இருந்து தம் சீடர்களின் வாழ்க்கை நெறியின் மையமாக இரக்கமே இருக்க வேண்டும் என உறுதிப்படுத்துகிறார். இயேசுவின் பணியில் இரக்கம் என்பது ஓர் அடிப்படையான கூறாக மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சட்டத்திற்கு முறையாக மதிப்பளிக்கக்கூடிய நிலையில் இருந்து அவருக்குச் செவிமடுத்தவர்களுக்கு இது உண்மையிலேயே அறைகூவல் விடுப்பதாய் உள்ளது. மறுபுறம், இயேசு சட்டத்தைக் கடந்து செல்கின்றார்; சட்டம் யாரைப் பாவிகள் எனக் கருதுகின்றதோ அவர்களுடன் அவர் சேர்ந்து இருப்பது அவரது இரக்கத்தின் ஆழத்தை நாம் உணர வழிவகுக்கிறது.

இதே ஒரு பயணத்தைத்தான் திருத்தூதர் பவுல் மேற்கொள்கிறார். தமஸ்கு நோக்கிய பாதையில் இயேசுவைச் சந்திக்கும் முன்பாக சட்டத்தின் நீதியை ஆர்வத்துடன் பின்பற்றுவதில் தமது வாழ்க்கையை அவர் அர்ப்பணித்தார் (காண் பிலி 3:6). கிறிஸ்துவிடம் அவர் கொண்ட மனமாற்றம் அவரது பார்வையைத் தலைகீழாக மாற்ற வழிவகுத்தது. எனவேதான், கலாத்திய நகர் மக்களுக்கு அவர் பின்வருமாறு எழுதுகிறார்: "திருச்சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல, இயேசு கிறிஸ்துவின்மீது கொள்ளும் நம்பிக்கையால்தான் ஒருவன் இறைவனுக்கு ஏற்புடையவர் ஆகமுடியும் என நாம் அறிந்திருக்கிறோம்... ஏனெனில் சட்டம் சார்ந்த செயல்களால் எவருமே இறைவனுக்கு ஏற்புடைவர் ஆவதில்லை" (கலா 2:16).

நீதி பற்றிய பவுலின் புரிதல் முற்றிலும் மாறுகின்றது. நீதியை அல்ல, இறைநம்பிக்கையைதான் இப்பொழுது முன்னிலைப்படுத்துகிறார். சட்டத்தைக் கடைப்பிடிப்பதன் வழியாக அல்ல; மீட்பளிக்கும் இரக்கத்தாலும் தம் இறப்பு, உயிர்ப்பாலும் மீட்பைக் கொணர்ந்த இயேசு கிறிஸ்துவில் கொண்டுள்ள இறைநம்பிக்கையால் மட்டுமேதான் மீட்பு கிடைக்கும் என்கிறார் அவர். அடிமைத்தனத்தால் அடக்கப்பட்டதால் உண்டான பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் விடுவிக்கும் சக்தியாக இப்பொழுது கடவுளின் நீதி வருகிறது. கடவுளின் நீதி என்பது அவரின் இரக்கமே (காண் திபா 51:11-16).

21. இரக்கம் என்பது நீதிக்கு எதிரானதல்ல; அது ஒரு பாவி தன்னைத்தானே காண ஒரு புதிய வாய்ப்பு வழங்கவும், மனமாற்றம் பெறவும், நம்பிக்கை பெறவும் கடவுள் தேடிச்செல்லும் வழியாகக் காணப்படுகின்றது. இறைவாக்கினர் ஓசேயாவின் அனுபவம் இரக்கம் எவ்வாறு நீதியைக் கடந்து செல்லக் கூடியது என்பதை நாம் காண உதவியாய் உள்ளது. இவ் இறைவாக்கினர் வாழ்ந்த காலம் யூத மக்களின் வரலாற்றில் ஒரு மிக முக்கியத் திடீர்த் திருப்பத்தைக் கொண்ட காலம். அரசாட்சி அழிவின் விளிம்பில் தள்ளாடிக் கொண்டிருந்தது; மக்களோ உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் இல்லாதிருந்தனர். அவர்கள் கடவுளிடமிருந்து விலகிச் சென்று விட்டார்கள்; மேலும் தங்கள் முன்னோர்களின் இறைநம்பிக்கையையும் தொலைத்து விட்டார்கள். மானுடச் சிந்தனைப்படி, பிரமாணிக்கமற்ற மக்களைக் கடவுள் வெறுப்பதாய் எண்ணுவது சரியானதொன்றாகத் தோன்றுகிறது; அவர்கள் கடவுளுடன் கொண்டிருந்த உடன்படிக்கையைக் கடைபிடிக்கவில்லை; எனவே, நியாயமான தண்டனையைப் பெறுவது, வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், நாடு கடத்தப்பட்டது ஏற்புடையதே. இறைவாக்கினரின் வார்த்தைகள் இதற்குச் சான்று கூறுகின்றன. ''எகிப்து நாட்டுக்கே அவர்கள் திரும்பிப் போவார்கள்; அசீரியா அவர்களை அரசாளும்; ஏனெனில் என்னிடம் திரும்பி வர மறுத்து விட்டார்கள்'' (ஓசே 11:5). இருப்பினும், நீதிக்கான இந்த அழைப்புக்குப் பின் இறைவாக்கினர் தமது உரையை முற்றிலும் மாற்றி கடவுளின் உண்மையான முகத்தை வெளிப்படுத்துகிறார்: ''எப்ராயிமே! நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரயேலே! உன்னை எப்படிக் கைநெகிழ்வேன்? உன்னை எப்படி அதிமாவைப் போலாக்குவேன்? செபோயிமுக்குச் செய்ததுபோல் உனக்கும் செய்வேனோ? என் உள்ளம் அதை வெறுத்து ஒதுக்குகின்றது. என் இரக்கம் பொங்கி வழிகின்றது. என் சீற்றத்தின் கனவைக் கொட்டமாட்டேன்; எப்ராயிமை அழிக்கத் திரும்பி வரமாட்டேன்; நான் இறைவன், வெறும் மனிதனல்ல; நானே உங்கள் நடுவில் இருக்கும் தூயவர், ஆதலால் நான் நகர்க்கு எதிராக வரமாட்டேன்'' (ஓசே 11:8-9). இறைவாக்கினரின் இவ் வார்த்தைகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் புனித அகஸ்டின் கூறியது: ''இரக்கத்தைவிட கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது கடவுளுக்கு



எளிதான ஒன்று.''[13] இது மிகவும் சரி. கடவுளின் கோபம் ஒரு நொடிப்பொழுது மட்டுமே நீடிக்கும்; ஆனால் அவரின் இரக்கம் எக் காலத்துக்கும் உரியது.

கடவுள் தம்மை நீதியுடன் மட்டும் நிறுத்திக் கொண்டார் எனில், அவர் கடவுளாக இருக்க முடியாது. மாறாக, சட்டங்கள் மட்டுமே மதிக்கப்பட வேண்டும் எனக் கேட்கும் மானுடர்களைப் போன்று அவர் இருப்பார். ஆனால், வெறுமனே நீதி மட்டும் போதுமானதல்ல. நீதி மட்டும் போதும் என்னும் அறைகூவல் அதன் அழிவில்தான் முடியும் என்பது அனுபவம். எனவேதான், கடவுள் தம் இரக்கத்தாலும் மன்னிப்பாலும் நீதியைக் கடந்து செல்கிறார். இருப்பினும், இது நீதியைக் குறைத்து மதிப்பிடும் செயலாகவோ, தேவைப்படாமல் வழங்கப்பட்டதாகவோ தவறாகப் புரிந்து கொள்ளப்படக் கூடாது. மாறாக, தவறு செய்யும் யாரும் அதற்கான விலையைப் பெற வேண்டும். இருப்பினும், இது முடிவல்ல, மாறாக, இது மனமாற்றத்தின் வெறும் தொடக்கமே. காரணம், இங்குதான் ஒருவன் கடவுளின் இரக்கத்தையும் கனிவையும் உணர ஆரம்பிக்கின்றான். கடவுள் நீதியை மறுப்பது இல்லை. மாறாக, இதைவிடப் பெரிய நிகழ்வாகிய உண்மையான நீதியின் அடிப்படையாகிய அன்பை நாம் அனுபவிப்பதில் கடவுள் நீதியை அரவணைத்து மூடுகிறார்; அதைக் கடந்து செல்கின்றார். எதற்காகத் தூய பவுல் தம் காலத்திய யூதர்களைக் கடிந்துரைக்கிறாரோ அதே தவற்றைச் செய்வதில் நாம் விலகி இருக்க விரும்பினால் அவர் கூறுவதற்கு மிகக் கவனமுடன் நாம் செவிமடுக்க வேண்டும்: ''கடவுள் மனிதர்களைத் தமக்கு ஏற்புடையவர்களாக்கும் முறையை அறிந்து கொள்ளாமல், யூதர்கள் தங்கள் முயற்சியாலேயே அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக முயன்றார்கள்; ஆகவே அவர்கள் கடவுளின் செயல்முறைக்குத் தங்களை உட்படுத்தவில்லை. கிறிஸ்துதான் திருச்சட்டத்தின் நிறைவு; அவர்மேல் நம்பிக்கை கொள்ளும் எவரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவார்'' (உரோ 10:3-4). கடவுளின் நீதி என்பது இயேசு கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பிலிருந்து வழிந்தோடும் அருளாக ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ள அவரது இரக்கமே. இவ்வாறு, நம் அனைவர்மீதும் உலகம் முழுமைமீதும் கிறிஸ்துவின் சிலுவைதான் கடவுளின் நீதித் தீர்ப்பாய் உள்ளது. காரணம், இதன்

13. *திருப்பாடல்களுக்கான மறையுரைகள் (Homilies on the Psalms)*, 76,11.

வழியாகத்தான் அவர் நமக்குப் புதிய வாழ்வையும் அன்பின் உறுதிப்பாட்டையும் வழங்கியுள்ளார்.

22. இந்த யூபிலி *பாவ மன்னிப்புச் சலுகை* வழங்குவதை இன்றியமையாததாக்குகிறது. இச் செயல் இரக்கத்தின் புனித ஆண்டில் கூடுதலான வகையில் முக்கியப் பொருள் பெறும். கடவுளின் மன்னிப்புக்கு எந்த எல்லையும் இல்லை. இயேசு கிறிஸ்துவின் இறப்பு, உயிர்ப்பில்தான் கடவுள் தமது அன்பையும் எல்லா மானுடப் பாவத்தையும் அழிக்கும் அதன் சக்தியையும் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார். பாஸ்கா மறைபொருள் வழியாகவும் திருஅவையின் பரிந்துரையாலும் கடவுளுடன் ஒப்புரவாவது சாத்தியமானதாகிறது. இவ்வாறு, கடவுள் எப்பொழுதும் மன்னிக்கத் தயாராக உள்ளார்; வியப்பூட்டும் வகையிலும் தொடர்ச்சியாக புதிய வழிகளிலும் மன்னிப்பதால் அவர் ஒருபோதும் சோர்வடைவதில்லை. இருப்பினும், பாவத்தின் அனுபவத்தை நாம் அனைவரும் நன்கு அறிந்துள்ளோம். நாம் நிறைவுள்ளவர்களாய் வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதைத் தெரிந்திருந்தாலும் (காண் மத் 5:48) பாவத்தின் கனமான சுமையை நாம் உணர்கிறோம். அருளின் உருமாற்றும் சக்தியை நாம் உணர்ந்திருந்தாலும் தவறி விழுந்த நிலைக்குரிய பாவத்தின் விளைவுகளையும் நாம் உணர்கின்றோம். மன்னிக்கப்படப்பட்டாலும் கூட நம் பாவங்களின் மனப்போராட்ட விளைவுகள் தொடர்ந்து இருக்கத்தான் செய்கின்றன. ஒப்புரவு அருளடையாளத்தில் கடவுள் நம் பாவங்களை உண்மையிலேயே துடைத்தழித்து மன்னிக்கிறார். ஆனாலும் கூட நமது சிந்தனை, செயல் ஆகியவற்றில் பாவம் ஒரு தவறான விளைவை விட்டுச் செல்கிறது. ஆனால், கடவுளின் இரக்கம் இதையும்விட சக்தி வாய்ந்தது. தந்தையைப் பொறுத்த மட்டில் கிறிஸ்துவாகிய மணமகன் வழியாகவும் அவரது திருஅவை வழியாகவும் அது *பாவ மன்னிப்புச் சலுகையாக* வருகின்றது; அவர் மன்னிக்கப்பட்ட பாவியைத் தேடி அடைந்து, அவனைப் பாவத்தின் விளைவுகளால் விடப்பட்ட எஞ்சியுள்ள ஒவ்வொன்றிலிருந்தும் விடுவிக்கிறார்; அவன் இரக்கத்துடன் செயல்படவும் பாவத்திற்குள் மீண்டும் விழுந்து விடாது அன்பில் வளரவும் அவனைத் தூண்டுகிறார். தூயவர்களின் உறவு ஒன்றிப்புக்குள்தான் திருஅவை வாழ்கிறது. நற்கருணையில் கடவுளிடமிருந்து பெறப்பட்ட கொடையாகிய இந்த உறவு ஒன்றிப்பு ஓர் ஆன்மிக உறவாக



வருகின்றது; எண்ணிலடங்காப் புனிதர்களுடனும் அருளாளர்களுடனும் நம்மை இணைக்கிறது (காண் திவெ 7:4). நமது வலுக்குறைவில் அவர்களது புனிதத்தன்மை நமக்கு உதவியாய் வருகிறது. இது சிலரின் வலுக்குறைவைப் பாதுகாக்க ஏனையோரின் வலிமையால், திருஅவையின் தாய்க்குரிய செபங்களாலும் வாழ்க்கை முறையாலும், அவர்களுக்கு உதவியாய் உள்ளது. எனவே, புனித ஆண்டின் பாவ மன்னிப்புச் சலுகையை வாழ்வது என்பது தந்தையின் மன்னிப்பு விசுவாசிகளின் வாழ்நாள் முழுவதும் நீடிக்கச் செய்வது என்ற உறுதிப்பாட்டுடன் அவரது இரக்கத்தை அணுகுவதாகும். பாவ மன்னிப்புச் சலுகையைப் பெறுவதென்பது கிறிஸ்துவின் மீட்பால் வழங்கப்படும் எல்லாப் பலன்களாலும் திருஅவையின் தூய்மைத்தன்மையை அனுபவிப்பதாகும். அப்பொழுது கடவுளின் அன்பும் மன்னிப்பும் எல்லா இடங்களுக்கும் பரவும். நம் பாவங்களை மன்னித்து நம்மைத் தமது இரக்கமிகுந்த "பாவ மன்னிப்புச் சலுகையால்" கழுவிட தந்தையிடம் இரந்து மன்றாடுவோம். இதன் மூலம் இந்த யூபிலியை முனைப்புடன் வாழ்வோமாக!

23. திருஅவையின் எல்லைகளையும் கடந்து இரக்கத்தின் ஒரு கூறு காணப்படுகின்றது. கடவுளின் மிக முக்கியப் பண்பு நலன்களில் ஒன்றான இரக்கத்தைக் கொண்டிருக்கும் யூத சமயத்துடனும் இஸ்லாமிய சமயத்துடனும் திருஅவை நம்மைத் தொடர்பு கொள்ளச் செய்கிறது. இவ் வெளிப்பாட்டை முதலில் பெற்றது இஸ்ரயேலர்தான். இது எல்லா மாந்தருடனும் பகிரப்பட வேண்டிய வற்றா வளமுடைய ஊற்றாக வரலாற்றில் தொடர்கிறது. நாம் மேலே கூறியதுபோல் பழைய ஏற்பாட்டின் பல பகுதிகள் இரக்கத்தில் ஆழ்ந்து தோய்ந்துள்ளன. காரணம், அவை தம் மக்கள் சார்பாக அவர்கள் தங்களது வரலாற்றில் மிகப்பெரும் சோதனைகளுக்கு ஆளான தருணங்களில் கடவுள் செய்த செயல்களை விளக்குகின்றன. படைத்தவருக்கு இஸ்லாமிய சமயம் வழங்கிய தனிச் சிறப்புமிக்க பெயர்கள் "இரக்கமும் பாசமும்" ஆகும். எந்த இஸ்லாமியர்கள் தங்கள் அன்றாட வலுவின்மைகளில் கடவுளின் இரக்கத்தால் தாங்கிப்பிடிக்கப்படுகிறோம், பின்தொடரப்படுகின்றோம் என உணர்கின்றார்களோ அந்தப் பிரமாணிக்கமுள்ள இஸ்லாமியர்களின் உதடுகளில் அடிக்கடி இந்த அழைப்பு இருக்கும். இறை இரக்கத்திற்கு யாரும் தடை போட முடியாது என அவர்களும் நம்புகின்றார்கள். காரணம், இரக்கத்தின் கதவுகள் எப்பொழுதும் திறந்தவண்ணமாகவே உள்ளன.

கடவுளின் இரக்கத்தைக் கொண்டாடும் இந்த யூபிலி ஆண்டு இத்தகைய சமயங்களுடனும் ஏனைய உண்மையான சமய மரபுகளுடனும் உள்ள உறவை வளர்த்து, இன்னும் சற்று கூடுதலான ஆர்வமிக்க உரையாடலுக்குத் திறந்த மனம் படைத்தவர்களாய் இருக்க நம்மை மாற்றும் என நான் நம்புகின்றேன். அப்பொழுதுதான் நாம் ஒருவர் மற்றவரைச் சிறப்பாக அறியவும் புரிந்துகொள்ளவும் இயலும். மூடிய மனப்பாங்கு, அவமரியாதை ஆகியவற்றின் ஒவ்வொரு வடிவத்தையும் நாம் நீக்குவோம்; வன்முறை, வேறுபாடுகாட்டுதல் ஆகியவற்றின் ஒவ்வொரு வடிவத்தையும் விரட்டியடிப்போம்.

24. இரக்கத்தின் தாயை நோக்கி இப்பொழுது என் சிந்தனைகள் திரும்புகின்றன. இப் புனித ஆண்டில் அவரது இனிமையான முகம் நம்மைக் காத்துப்பேணுவதாக; அப்பொழுதுதான் நாம் அனைவரும் கடவுளின் இன்கனிவை மீண்டும் கண்டுபிடிப்போம். மரியாவைப் போன்று யாருமே மனுவுருவேற்ற மறைபொருளை மிக ஆழ்ந்து கண்டுணர்ந்தது இல்லை. இரக்கத்தின் உடனிருப்பு மனுவுரு ஏற்ற பின் அவரது வாழ்வு முழுவதும் ஒரு முன்மாதிரியாகத் திகழக் கூடியதாய் மாறியது. சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தவரின் தாய் அவரது அன்பின் மறைபொருளில் மிக நெருக்கமாகப் பங்கேற்ற காரணத்தால் இறை இரக்கத்தின் திருப்பீட முற்றத்துக்குள் நுழைந்து விட்டார்.

கடவுளின் மகனுடைய தாயாகத் தெரிவு செய்யப்பட்ட மரியா, அந்தத் தருணத்தில் இருந்து கடவுளின் அன்பால் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஓர் *உடன்படிக்கைப் பேழை*யாகத் திகழத் தயார் செய்யப்பட்டார். அவர் தமது இதயத்தில் இயேசுவாகிய தம் மகனோடு உள்ள முழுமையான தம் ஒன்றிப்பில் இறை இரக்கத்தை மதிப்புமிக்கதாய் வைத்துப் பாராட்டினார். எலிசபெத்தின் வீட்டின் நுழைவாயிலில் அவர் பாடிய தலைமுறை தலைமுறையாக நீடிக்கக்கூடிய புகழ்ச்சிப் பாடல் கடவுளின் இரக்கத்திற்கு அர்பணிக்கப்பட்டதாகும் (லூக் 1:50).

கன்னி மரியாவின் இறைவாக்கினருக்குரிய இந்த வார்த்தைகளில் நாமும் கூட உள்ளடக்கப்பட்டுள்ளோம். இறை இரக்கத்தின் பலன்களை அனுபவிக்கப் புனித ஆண்டின் நுழைவாயிலைக் கடக்க உள்ள நிலையில் இதுவே நமக்கு ஆறுதல், ஆற்றல் ஆகியவற்றின் ஊற்றாக இருக்கும்.



சிலுவைக்கு அடியில் மரியா அன்புச் சீடராகிய யோவானுடன் சேர்ந்து இயேசுவால் கூறப்பட்ட மன்னிப்பின் வார்த்தைகளுக்குச் சான்று பகர்ந்தார். அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள்மேல் காட்டப்பட்ட இந்த இரக்கத்தின் உயர்வான வெளிப்பாடு கடவுளின் இரக்கம் எந்தளவுக்குச் செல்லும் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. இறை மகனின் இரக்கம் எல்லை ஏதுமின்றியும் எவ்வித விதிவிலக்குமின்றியும் ஒவ்வொருவரையும் சென்றடைகிறது என்பதற்கு மரியா ஒரு சான்றாக உள்ளார். *மிகவும் இரக்கமுள்ள தாயே* என்னும் தொன்மையும் புதினமும் கொண்ட செபத்தில் உள்ள வார்த்தைகளால் அவரை நாம் கூவி அழைப்போம். அப்பொழுது அவர் தம்முடைய இரக்கம் மிகுந்த கண்களை நம்மீது திருப்புவதில் இருந்து ஒருபோதும் சோர்வடையமாட்டார்; மேலும் நம்மை இரக்கத்தின் முகமாகிய தம் மகன் இயேசுவைப் பற்றித் தியானிக்க நம்மைத் தகுதியுள்ளவராக்குவார்.

இறை இரக்கத்தைத் தங்களின் பணியாக வாழ்வில் கடைப்பிடித்த புனிதர்களையும், அருளாளர்களையும் நம் செபங்கள் சென்றடையட்டும். இரக்கத்தின் பெரிய திருத்தூதராகிய தூய ஃபவுஸ்டினா கொவால்ஸ்காவை நான் சிறப்பாக நினைத்துப் பார்க்கிறேன். இறை இரக்கத்தின் ஆழத்திற்குள் நுழைய அழைக்கப்பட்ட அவர் கடவுளின் இரக்கத்திற்கு ஏற்ப நாம் எப்பொழுதும் வாழவும் நடக்கவும் அவரது அன்பில் அசைக்க முடியா நம்பிக்கை கொள்ளவும் நமக்காகப் பரிந்துபேசி இறையருளைப் பெற்றுத் தருவாராக.

25. எனவே, நம் அனைவருக்கும் தந்தை தொடர்ந்து வழங்கும் இரக்கத்தை நமது அன்றாட வாழ்வில் வாழ்ந்து காட்ட இந்தச் சிறப்பு யூபிலி ஆண்டை நான் அர்ப்பணிக்க விரும்புகிறேன். இந்த யூபிலி ஆண்டில் கடவுள் நமக்கு வியப்பூட்ட நம்மையே அனுமதிப்போம். அவர் தமது இதயக் கதவை எல்லாருக்கும் திறந்து வைப்பதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை; அவர் நம்மை அன்பு செய்கிறார் என்பதையும் தமது அன்பை நம்முடன் பகிர்ந்துகொள்ளவும் விரும்புகின்றார் என்பதையும் மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கிறார். கடவுளின் இரக்கத்தை அறிவிப்பதன் உடனடித் தேவையையும் திருஅவை உணர்கிறது. ஆகவே எப்பொழுது திருஅவையும் இரக்கத்தின் நம்பத்தக்க தூதுவராய் மாறுகிறதோ அப்பொழுது மட்டும்தான் அதன் வாழ்வு நம்பத்தக்கதாகவும் நேர்மையானதாகவும் இருக்கும்.

குறிப்பாக, பெரிய நம்பிக்கைகள் மிகுந்த தருணத்திலும் முரண்பாட்டின் அடையாளங்கள் நிறைந்த தருணத்திலும் கிறிஸ்துவின் முகத்தைத் தியானிப்பதன்மூலம் ஒவ்வொருவருக்கும் கடவுளுடைய இரக்கத்தின் மாபெரும் மறைபொருளை அறிமுகம் செய்வது அதனுடைய தலையாகிய கடமை என்பது அதற்குத் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசு கிறிஸ்துவின் இறைவெளிப்பாட்டின் மையமாக உள்ள இரக்கத்தை திருஅவை அறிக்கையிடுவதன் மூலமும் வாழ்வதன் மூலமும் நம்பகத்தன்மைமிக்க சான்றாக இருக்க அது அழைக்கப்பட்டுள்ளது. மூவொரு கடவுளின் இதயத்திலிருந்தும் அவரது மறைபொருளின் ஆழத்திலிருந்தும் இரக்கத்தின் பெரிய ஆறு இடைவிடாது பொங்கியெழுந்து வழிந்தோடுகிறது. எத்தனை மனிதர்கள் இதை அணுகினாலும் இந்த ஊற்று ஒருபோதும் வற்றிப்போவதில்லை. கடவுளின் இரக்கம் ஒருபோதும் முற்றுப்பெறாது என்னும் காரணத்தால் தேவையில் இருக்கும் எந்த ஓர் ஆணும் அல்லது பெண்ணும் அதை எப்பொழுதும் அணுக முடியும். அதைச் சூழ்ந்திருக்கக் கூடிய மறைபொருளின் வளமை என்பது அதிலிருந்து பொங்கி வரும் என்றும் வற்றா முழுநிறைவாக உள்ளது.

இந்த யூபிலி ஆண்டில் இறை வார்த்தையை மன்னிப்பு, ஆற்றல், உதவி, அன்பு ஆகியவற்றின் செய்தியாகவும் அடையாளமாகவும் திருஅவை உறுதியாகவும் தெளிவாகவும் திரும்பத் திரும்ப முழங்கி எதிரொலிக்கச் செய்யட்டும். இரக்கத்தை வழங்குவதிலும் பரிவு, ஆறுதல் ஆகியவற்றை வழங்குவதிலும் எப்பொழுதும் பொறுமையாய் இருப்பதிலும் அது ஒருபோதும் சோர்வடையாதிருப்பதாக. திருஅவை ஒவ்வொர் ஆணின், பெண்ணின் குரலாக மாறிப் பின்வரும் திருப்பாடல் வரிகளை இறுதிவரை உறுதிப்பாட்டுடன் மீண்டும் மீண்டும் சொல்லட்டும்: “ஆண்டவரே, உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் நினைந்தருளும்; ஏனெனில், அவை தொடக்க முதல் உள்ளவை” (திப 25:6).

*திருத்தந்தையாக நான் பொறுப்பேற்ற மூன்றாம் ஆண்டில், நம் ஆண்டவரின் ஆண்டு 2015 ஏப்ரல் 11-ஆம் நாளன்று, உயிர்ப்பின் இரண்டாம் ஞாயிறு திருவிழிப்பின்போது, அதாவது இறை இரக்கத்தின் ஞாயிறன்று உரோமையில் தூய பேதுரு ஆலயத்தில் வழங்கப்பட்டது.*

**பிரான்சிஸ்**